எல்லா ஆகமங்களுக்கும், புராணங்களுக்கும் (இந்த வைகானஸ ஆகமமே) மூலம் என்று தெளிவாகிறது.

இவ்வளவு பழமைவாய்ந்த இந்த வைகானஸ ஆகமத்தை அடியொற்றி வருபவர்கள் வைகானஸர்கள் எனப்படுவர்.

வைகானஸர்கள்பற்றி :

அர்ச்சாரூபியாய் பூலோகத்தில் எழுந்தருளியிருக்கும் பகவான் ஸ்ரீமந் நாராயணனை அர்ச்சிப்பதே அர்ச்சகனின்* பணியாகும். பகவானைத் தரிசிக்க வரும் பக்தர்களிடம் அன்பு காட்டி, இறைவனுக்கு அவர்களுக்காக (பக்தர்களுக்காக) பூஜைசெய்து, அவர்களின் மனக்குறை நீங்கி நிம்மதியுடன் செல்லச் செய்வதும் அர்ச்சகர்களின் கடமையாகும். இறைவனை நாடிவரும் அனைவரையும் சமமாகக் கருதி அர்ச்சிக்க வேண்டும். பகவானின் கைங்கர்ய பரமாகவே எப்பொழுதும் செயல்பட வேண்டும். இவ்வாறு கைங்கர்யம் செய்யும் அர்ச்சகர்கள் மீண்டும் பிறப்பதில்லை. அவருக்கு இணை எவருமில்லை.

விகனஸாசார்யனுக்கு "விகனோமுநி" என வழங்குவது பொருந்துமா ?

விகனஸாசார்யனை "விகனோமுநி" என வழங்குவது பொருந்தும். "முநி" என்ற நிலையை அடைய சில கர்மாக்களைச் செய்திருக்க வேண்டும் என்று வைகானஸ க்ருஹ்ய சூத்ரம் உரைக்கிறது.

निषेकादाजातकात् संस्कृतायां ब्राह्मण्यां ब्राह्मणात् जातमात्रो मात्रः ।

நிஷேகாதா ஜாதகாத் ஸம்ஸ்க்ருதாயாம் ப்ராம்மண்யாம்
ப்ராம்மணாத் ஜாதமாத்ரோ மாத்ர: ।

நிஷேகம் முதலான 18 ஸம்ஸ்காரங்களும் முறையே செய்யப்பட்ட ப்ராம்மணனுக்கும். பெண்ணிற்கும் பிறந்த குழந்தைக்கு "மாத்திரை" என்று பெயர்.

---

1. अत्रि संहिता — அத்ரி ஸம்ஹிதா.

"வைகானஸர்கள் பற்றி" என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள செய்திகள் அனைத்தும் "அர்ச்சகன் யார்?" என்ற கவிதையின் தொகுப்பாகும்.

* அர்ச்சகன் யார்? By கடுக்கலூர் S. ரகுவீரபட்டாச்சாரியார், M. A. M. A. M Ed., ஸ்ரீவைகானஸ அர்ச்சக பெனிபிட் சொசைடி, வெள்ளி விழா மலர். 1981.

अथ निषेकादि संस्कारान् व्याख्यास्यामः —

ऋतुसङ्गमन, गर्भादान, पुंसवन, सीमन्त, विष्णुबली, जातकर्म, उत्तान, नामकरण, अन्नप्राशन, प्रवासागमन, पिण्डवर्धन, चौल, उपनयन, पारायणव्रतबन्ध, विसर्ग, उपाकर्म, समावर्तन, पाणिग्रहणानीत्यष्टादश संस्काराः शारीराः ।

அதநிஷேகாதி ஸம்ஸ்காரான் வ்யாக்யாஸ்யாம:

நிஷேகம் முதலானவற்றின் விளக்கத்தைக் கூறுகிறேன். ருது ஸங்கமனம், கர்பாதானம், பும்ஸவநம், ஸீமந்தம், விஷ்ணுபலி, ஜாதகர்மம், உத்தானம், நாமகரணம், அன்னப்ராசனம், ப்ரவாஸாகமனம், பிண்டவர்தனம் சௌளம், உபநயனம், பாராயணவ்ரதபந்தம், விஸர்கம், உபாகர்மம், ஸமாவர்தனம், பாணிக்ரஹணம் என்பதாக 18 ஸம்ஸ்காரங்கள் சரீரத்திற்காக சொல்லப்பெற்றது.

उपनीत सावित्र्यध्ययनाद्ब्राह्मणः ।

உபநீத ஸாவித்ர்யத்யயனாத் ப்ராம்மண: ।

உபநயனமான பிறகு ஸாவித்ரீ ஜபம் செய்பவன் "ப்ராம்மணன்".

वेदमधीत्य शारीरैः आपाणिग्रहणात् संस्कृतः पाकयज्ञैरपियजन् श्रोत्रियः ।

வேதமதீத்ய சாரீரை: ஆபாணிக்ரஹணாத் ஸம்ஸ்க்ருத:
பாக யக்ஞைரபியஜன் ச்ரோத்ரிய: ।

வேதாத்யயனம் செய்து முடித்து, ஸாவித்ர்யாதி வ்ரதங்கள் முடித்து விவாஹம் செய்து கொண்டு, ஏழுபாக யக்ஞங்களையும் செய்தவருக்கு "ச்ரோத்ரியர்" என்று பெயர்.

स्थालीपाक, आग्रयण, अष्टका, पिण्डपितृयज्ञ, मासिश्राद्ध, चैत्र, आश्वयुजी इति सप्त पाक यज्ञाः ।

ஸ்தாலீபாகம், ஆக்ரயணம், அஷ்டகா, பிண்டபித்ரு யக்ஞம், மாஸி ச்ராத்தம், சைத்ரம், ஆச்வயுஜி என்பதாக பாக யக்ஞங்கள் ஏழு வகைப்படும்.

स्वाध्याय परश्च आहिताग्निः हविर्यज्ञैरप्यनूचानः ।

ஸ்வாத்யாய பரச்ச ஆஹிதாக்னி: ஹவிர்யக்ஞைரப்யநூசான: ।

பொருள்: தனது வேதபரமாக *(ஆஹிதாக்னியாக இருந்துகொண்டு) அணையாத அக்னி ஸம்பத்து உடையவரும் ஏழு ஹவிர் யக்ஞங்களையும் செய்தவருக்கு "அனூசானர்" என்று பெயர்.

अग्न्याधेय, अग्निहोत्र, दर्शपूर्णमास, आग्रयणेष्टि, चातुर्मास्य, निरूढ पशुबन्ध, सौत्रामणीति सप्तहविर्यज्ञाः ।

அக்ன்யாதேயம், அக்னிஹோத்ரம், தர்சபூர்ணமாஸம், ஆக்ரயணேஷ்டி, சாதுர்மாஸ்யம், நிரூட பசுபந்தம், ஸௌத்ராமணி என்பதாக ஹவிர் யக்ஞங்கள் ஏழாகும்.

सोम यज्ञैरपि भ्रूणः ।

ஸோம யக்ஞைரபி ப்ரூண:

மேலும் ஸோம யக்ஞங்களையும் செய்தவருக்கு "ப்ரூணர்" என்று பெயர்.

अग्निष्टोम, अत्यग्निष्टोम, उक्थ्य, षोडशी, वाजपेय, अतिरात्र, अप्तोर्याम इति सप्त-सोम यज्ञाः ।

அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்த்யம், ஷோடசீ, வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம் என்பதாக ஸோம யக்ஞங்கள் ஏழு வகைப்படும்.

ब्रह्मयज्ञ, देवयज्ञ, पितृयज्ञ, भूतयज्ञ, मनुष्ययज्ञ इति पञ्चानां अहरहनुष्ठानम् ।

ப்ரம்ம யக்ஞம், தேவ யக்ஞம், பித்ரு யக்ஞம் பூத யக்ஞம், மனுஷ்ய யக்ஞம் என்ற இந்த ஐந்துவித யக்ஞங்களும் தினமும் செய்யவேண்டியவை. எனவே இவையனைத்தையும் ஒரே யக்ஞமாகக் கணக்கில் கொள்ளவேண்டும்.

संस्कारैरेतैरुपेतैः नियम यमाभ्यां[1] ऋषिकल्पः ।

ஸம்ஸ்காரை ரேதைருபேதை: நியம யமாப்யாம் ரிஷிகல்ப: ।

---

* ஆஹிதாக்னி: — ஜ்வலிக்கின்ற அக்னி

1. नियमप्रभेदाः — तपः सन्तोषः आस्तिक्यं, दानं, विष्णुपूजा, वेदार्थश्रवणं, कुत्सितकर्मसुलज्जा, गुरूपदेशश्रद्धा, मन्त्राभ्यासः, होम इति दशधा भवन्ति ।

நியமத்தின் விதங்கள் — தவம், சந்தோஷம், ஆஸ்திகம், தானம், இறை வழிபாடு, வேதார்த்தங்களைக் கேட்டல், கெட்ட காரியத்தைச் செய்வதில் வெட்கம், குரு உபதேசத்தில் ஈடுபாடு, ஜபம், ஹோமம் என்பதாக நியமம் பத்து விதமாகும்.

முன் சொல்லப்பட்ட 18 ஸம்ஸ்காரங்களும் 22 யக்ஞங்களுமாக சேர்ந்து 40 ஸம்ஸ்காரங்கள். இவை அனைத்தையும் செய்து, [1]யம, நியமங்களைக் கடைபிடிப்பவருக்கு "ரிஷிகல்பர்" என்று பெயர்.

[2]साङ्ग चतुर्वेदतपोयोगादृषिः ।

ஸாங்க சதுர்வேத தபோ யோகாத்ருஷி: ।

ஆறு அங்கங்களுடன் சேர்ந்த நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்து, தவ வலிமையும் பெற்றுத் திகழ்பவருக்கு "ரிஷி:" என்று பெயர்.

नारायण परायणो निर्द्वन्द्वो मुनिः ।

நாராயண பராயணோ நிர்த்வந்த்வோ முநி: ।

யாதொன்றிலும் பற்றில்லாமல் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனையே சரணெனப் பற்றுகின்றவருக்கு "முநி:" என்று பெயர்.

இவையனைத்தும் விகனஸாசார்யனிடத்து நிரம்பியிருந்தமையால் அவரை "விகனோமுநி" என்று சிஷ்யர்கள் அழைத்தனர்.

நித்யார்ச்சனா விதி பற்றி:-

பகவான் ஸ்ரீமன் நாராயணன் பல அவதாரங்களை எடுத்தார் என்பது அனைவரும் அறிந்ததே. அவ்வாறு அவதாரம் செய்த உருவத்தை அர்ச்சா ரூபமாய் (சிலை வடிவாய்) ஆங்காங்கு (ஆலயங்களில்) எழுந்தருளச் செய்து அம்மூர்த்தங்களுக்கு தினமும் ஆராதனை (பூஜை) செய்ய வேண்டும். இப்படி தினந்தோறும் செய்கின்ற பூஜையையே "நித்யார்ச்சனம்" என்பர்.

முன்பக்கத் தொடர்ச்சி

यमप्रभेदाः — अहिंसा, सत्यं, अचौर्यं, गृहस्थस्य स्वदारनिरतिः अन्येषां सर्वत्र मैथुनत्यागः, दया, आर्जवं क्षान्तिः, धैर्यं, मिताशनं इति दशधा भवन्ति ।

யமத்தின் விதங்கள் — அஹிம்சை, சத்யம், திருடாமை, வரையறுக்கப்பட்ட இல்லறம், தயை, ஆர்ஜவம், பொறுமை, உறுதி, மிதாகாரம் (அளவான உணவு உட்கொள்ளல்), சௌசம் என்பதாக யமம் பத்து விதமாகும்.

2. "शिक्षाकल्पोव्याकरणं निरुक्तं छन्दो ज्योतिषमिति"

"சிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம் சந்தோ ஜ்யோதிஷமிதி" (முண்டகோபநிஷத்)

சிக்ஷா, கல்பம், வ்யாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜ்யோதிஷம் என்ற ஆறும் வேதத்தின் அங்கங்களாகும்.

''ஆராதனானாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதனம் பரம்'' என்று அர்ச்சனா நவனீதத்தில் சொல்லப்பெற்றது போல பூஜைகளில் சிறந்தது விஷ்ணு பூஜையே. ஏனெனில் ''விஷ்ணுர் ஸர்வேஷாமதிபதி:'' விஷ்ணுவே அனைத்திற்கும் அதிபதி என்று வேதம் கூறுகிறது. எனவே அனைத்திற்கும் தலைவனான விஷ்ணுவை ஆராதனை செய்ய வைகானஸ ஆகமத்தைத் தோற்றுவித்த விகனஸாசார்யனின் சிஷ்யர்களான 'ப்ருகு அத்ரி காச்யப மரீசி'' ஆகியோரின் நித்யார்ச்சன விதியின் சிறப்பம்சத்தைக் காண்போம்.

மரீசி : மரீசி மஹரிஷியால் சொல்லப்பெற்ற ஆனந்த ஸம்ஹிதையில் விமானார்ச்சன கல்பத்தில் நாற்பத்தோராவது படலமாக ''நித்யார்ச்சன விதி'' யானது அமைந்துள்ளது. ''விமானார்ச்சன கல்பம் என்னும் நூல் உரை நடை வடிவிலமைந்தது மற்ற மூன்று சிஷ்யர்களான ''ப்ருகு. அத்ரி, காச்யபர்'' ஆகியோரால் சொல்லப்பெற்ற நித்யார்ச்சன விதியை நோக்கும் போது இவரால் (மரீசியால்) சொல்லப்பெற்ற இந்த நித்யார்ச்சன விதி மிகவும் தெளிவாகவும், அனைத்து கர்மாக்களும் சொல்லப் பெற்றுள்ளதாயும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

காச்யபர் : விகனஸாசார்யனின் சிஷ்யர்கள் நால்வரில் இவரும் ஒருவர். இவரால் (காச்யபரால்) சொல்லப்பெற்ற ஸம்ஹிதையில் ''ஞான காண்டத்தில்'' அறுபத்தொன்பது, எழுபது ஆகிய இரு அத்யாயங்களில் உரைநடை வடிவில் ''நித்யார்ச்சன விதி''யானது அமைந்துள்ளது. மற்ற மூன்று ரிஷிகளைப் போலவே ''ப்ரதத் விஷ்ணு:'' எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி தேவாலயத்தை ப்ரதக்ஷிணம் செய்வது முதல் தொடங்கி நித்யதிருவாராதனம் முடிந்து பலி சாதித்து முடித்துவிட்டு. திருவாராதனத்தின் தொடக்கத்தில் மற்ற பேரங்களுக்கு த்ருவ பேரத்திலிருந்து கலையை ஆவாஹனம் செய்ததை திரும்பவும் த்ருவ பேரத்திலேயே ஆரோபனம் செய்யச் சொல்லி விட்டு பிறகு கதவைப் பூட்டுவதற்கான மந்திரத்தைச் சொல்லியுள்ளார். நித்யார்ச்சன விதியைப் பொறுத்தவரை இது ஒரு சிறப்பம்சமாகும். இவரால் சொல்லப் பெற்ற ''நித்யார்ச்சன விதி'' இரத்தினச் சுருக்கமாக உள்ளது எனில் அது மிகையாகாது.

ப்ருகு : ப்ருகு மஹரிஷியால் சொல்லப்பெற்ற ஸம்ஹிதையில் க்ரியாதிகாரத்தில் ''நித்யார்ச்சன விதி''யானது ஒன்பதாவது அத்யாயமாகத் தனிச் சிறப்புடன் அமைந்துள்ளது. கௌதுகர் முதல் பலிபேரம் வரையிலான பஞ்ச பேரத்தையும் கருவறையில் எந்தெந்த இடத்தில் எழுந்தருளச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அடுத்து த்ருவ பேரத்திற்கும் கௌதுக பேரத்திற்கும் சேர்க்கும் ஸம்பந்த கூர்ச்சத்தின் நுனியானது கௌதுகரை நோக்கியிருக்குமாறு சேர்க்க வேண்டும் என்று கூறியுள்ளார். மற்ற இடங்களை நோக்கும்போது த்ருவ பேரத்திற்கும், கௌதுக பேரத்திற்கும் ஸம்பந்த கூர்ச்சம் சேர்க்க வேண்டும், என்றுள்ளதே தவிர எந்த பேரத்தைக் குறித்து

நுனியானது இருக்க வேண்டுமென்பதை இவரது நித்யார்ச்சன விதியால்தான் அறிய முடிகிறது. அத்ரி, காச்யபர், மரீசி ஆகிய மூன்று ரிஷிகளாலும் சொல்லப்பெற்ற நித்யார்ச்சன விதியில் அர்ச்சகருக்கு "மாத்ரா தானம்" (அரிசி தானம்) செய்ய வேண்டும் என்று சொல்லப்பெற்றுள்ளதே தவிர அளவு குறிப்பிடப்பெறவில்லை. ஆனால் இவரால் (ப்ருகுவால்) சொல்லப்பெற்ற நித்யார்ச்சனத்தில்

"द्रोणतण्डुलमादाय तदर्धं पादमेव वा ।
तण्डुलार्धतिलैर्युक्तं मुखवासफलान्वितम् ॥

दर्शयेद्देवदेवस्य "सोमं राजान" मुच्चरन् ।
आचार्याय ततो दद्याद्भक्त्यासम्पूज्य पूजक: ॥"

த்ரோணதண்டுலமாதாய ததர்தம் பாதமேவ வா ।
தண்டுலார்ததிலைர்யுக்தம் முகவாஸ பலாந்விதம் ॥

தர்சயேத்தேவதேவஸ்ய "ஸோமம் ராஜான" முச்சரன் ।
ஆசார்யாய ததோ தத்யாத்பக்த்யா ஸம்பூஜ்ய பூஜக: ॥

*த்ரோணமளவு அல்லது அதில் பாதியோ, கால் பாகமோ அரிசியை எடுத்துக்கொண்டு, எடுத்துக்கொண்ட அரிசியில் பாதியளவு எள்சேர்த்து, வெற்றிலை பாக்கு, பழம் ஆகியவற்றுடன் சேர்த்து, பெருமாளிடம் காண்பித்துவிட்டு, "ஸோமம் ராஜானம்" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி, அர்ச்சகருக்கு அரிசியைத் தானமாகக் கொடுக்கவேண்டும் என்று உள்ளது. மேற்சொல்லப்பெற்ற அனைத்தும் ப்ருகு மஹரிஷியால் சொல்லப்பெற்ற நித்யார்ச்சனத்திலுள்ள சிறப்பம்சங்களாகும்.

அத்ரி: அத்ரி மஹரிஷியால் சொல்லப்பெற்ற ஸம்ஹிதையில் "ஸமூர்த்தார்ச்சனாதிகரண"த்தில் நாற்பதாவது அத்யாயத்தில் நித்யார்ச்சன விதி இடம்பெற்றுள்ளது. இவரது படைப்பையும், மற்ற ரிஷிகளின் படைப்பையும், பார்க்கும்போது ஒன்றாக இருப்பதால் அதனை (நித்யார்ச்சனத்தை) விட்டுவிட்டு, நித்யார்ச்சனமானது விடுபட்டால் செய்ய வேண்டிய ப்ராயச்சித்தம் சொல்லப்பெற்றுள்ள எழுபதாவது அத்யாயம் மட்டும் இந்நூலில் இடம்பெறுகிறது.

சுவடிபற்றி :

பதிப்பிற்கு எடுத்துக்கொண்ட சுவடியானது இந்நூலகத்தில் "வைகானஸ தந்த்ரம்" என்ற தலைப்பில் B. 3552 — D. 15344 என்ற எண்ணில் பதிவாகியுள்ளது. இதிலிருந்து நாற்பத்தோராவது படலமான "நித்யார்ச்சன விதி"

---

* இன்றைய நிறுத்தல் அளவையில் 8 கிலோ 960 கிராம்.

மட்டும் மூலம் தேவநாகரி—தமிழ், மற்றும் தமிழ் உரையுடன் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. மற்ற மூன்று ரிஷிகளாலும் செய்யப்பெற்ற க்ரந்தங்கள் சுவடி வடிவில் இங்கு கிடைக்கப்பெறவில்லை. நமது நூலகத்திலிருந்து காச்யபர், அத்ரி ஆகிய இரு ரிஷிகளுடைய க்ரந்தங்கள் புத்தகமாக S. 2060, S. 1427 என்ற எண்ணில் கிடைக்கப்பெற்றது. ப்ருகு ஸம்ஹிதை க்ரியாதிகாரம் நமது நூலகத்தில் இல்லாமை கருதி உப்பிலியப்பன் சந்நிதி திரு. முத்துக்ருஷ்ண பட்டாச்சார் ஸ்வாமி அவர்களிடமிருந்து பெறப்பெற்றுப் பதிப்பிக்கப்பெற்றது.

இந்நூலின் பயன்

அர்ச்சகர்கள் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டியது பகவானின் நித்ய (பூஜை) திருவாராதனம். "**येन केन प्रकारेण विष्णोरर्चनमुत्तमम्** — யேந கேந ப்ரகாரேண விஷ்ணோரர்ச்சனமுத்தமம்" என்று அர்ச்சனா நவனீதத்தில் சொல்லியுள்ளதுபோல உத்தமமான விஷ்ணுவின் திருவாராதனத்தை அனைவரும் அறிந்துகொள்வதற்கிணங்க, இந்நூலில், மூலம் தேவநாகரியிலும், அதனையே தமிழிலும், வடமொழிக்குப் பொருள் புரிந்துகொள்ள தமிழ் மொழிபெயர்ப்புடனும் இந்நூலகம் வெளியிடுகிறது. முதற்போல் இதனை அறிஞர்களும், அர்ச்சகர்களும் மற்றும் இதில் ஈடுபாடுடைய அனைவரும் கற்று பயன்பெறுவர் என்பது திண்ணம்.

நன்றியுரை

இந்நூலினைப் பதிப்பிக்க ஆணைவழங்கிய மாவட்ட ஆட்சியர் மற்றும் நூலக இயக்குநர் (பொறுப்பு) திரு. இ. வெங்கடாசலம் I. A. S. அவர்களுக்கும், நூலக நிருவாக அலுவலர் திரு. பா. இளங்கோ ராஜன் B. Sc. B. Tech., அவர்களுக்கும், நூலகர் மற்றும் நூலக வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், M. A., M. L. I. S. அவர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பதிப்பிற்குத் தேவையான நூலாகிய ப்ருகு ஸம்ஹிதா க்ரியாதிகாரத்தை அளித்துதவிய உப்பிலியப்பன் சந்நிதி திரு. முத்துகிருஷ்ண பட்டார்ச்சாரியார் ஸ்வாமிக்கும் எனது நன்றியை உரித்தாக்கி மகிழ்கின்றேன். இந்நூல் பிழையின்றி வெளிவர உதவிய இந்நூலக மேநிலை வடமொழிப் பண்டிதர் தேதியூர், திரு. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலினை நன்கு அச்சிட்டுத் தந்த இந்நூலக அச்சகப் பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியை உளமாற நல்கி மகிழ்கிறேன்.

தஞ்சாவூர்
25—6—1993

- S. சுதர்சனன்
வடமொழிப் பண்டிதர்
சரசுவதி மகால் நூலகம்.

॥ श्रीः ॥

॥ श्रीविखनसमहागुरवे नमः ॥

ஸ்ரீ விகனஸமஹாகுரவே நம:

॥ नित्यार्चनविधिः ॥

நித்யார்ச்சனவிதி:

अथ विष्णोः नित्यार्चनाविधिं व्याख्यास्यामः ।

मन्त्रेण स्नात्वा, आचम्य, कृतप्राणायामः, सावित्रीं जप्त्वा, सन्ध्यामुपास्य, देवादीनद्भिस्तर्पयित्वा ब्रह्मयज्ञं कुर्यात् । "प्रतद्विष्णुस्तवत" इति देवालयं गत्वा, प्रदक्षिणं करोति । "मणिकं प्रपद्ये" इति द्वारपालं प्रणम्य, कवाट बन्धं यन्त्रिकया "निरस्तँ" इति निरस्य "हिरण्यपाणिं" इति कवाटमुद्घाटयति । "दिवं विभृणातु" इत्यन्तः प्रविश्य वैष्णवैः मन्त्रैः देवं प्रणमेत् । "उद्दीप्यस्व" इति दीपानुद्दीप्य, "शाम्यन्तु" इति पाणिना दक्षिणेन वामे सन्ताड्य भगवत इति देवं प्रणमेत् ।

அத விஷ்ணோ: நித்யார்ச்சனா விதிம் வ்யாக்யாஸ்யாம: ।

மந்த்ரேண ஸ்நாத்வா, ஆசம்ய, க்ருத ப்ராணாயாம:, ஸாவித்ரீம் ஜப்த்வா, ஸந்த்யாமுபாஸ்ய, தேவாதீனத்பிஸ்தர்பயித்வா ப்ரம்ம யக்ஞும் குர்யாத். "ப்ரதத்விஷ்ணுஸ்தபத" இதி தேவாலயம் கத்வா, ப்ரதக்ஷிணம் கரோதி. "மணிகம் ப்ரபத்யே" இதி த்வாரபாலம் ப்ரணம்ய, கவாடபந்தம் யந்த்ரிகயா "நிரஸ்தகும்" இதி நிரஸ்ய "ஹிரண்யபாணிம்" இதி கவாடமுத்காடயதி. "திவம் வில்ருணோது" இத்யந்த: ப்ரவிச்ய வைஷ்ணவை: மந்த்ரை: தேவம் ப்ரணமேத். "உத்தீப்யஸ்வ" இதி தீபானுத்தீப்ய, "சாம்யந்து" இதி பாணினா தக்ஷிணேன வாமே ஸந்த்தாட்ய பகவத இதி தேவம் ப்ரணமேத்.

பொருள்: ஸமந்த்ரக ஸ்நானம் செய்து, ஆசமனம், ப்ராணாயாமம் செய்து, ஸாவித்ரீயை ஜபித்து, காலை சந்தி வழிபாட்டை முடித்துக்கொண்டு

தேவரிஷி பித்ரு தர்பணங்களைச் செய்து, ப்ரம்ம யக்ஞம் செய்யவேண்டும். "ப்ரதத்விஷ்ணுஸ்தபத" என்று தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லிக்கொண்டு கோவிலுக்குச் சென்று (தேவாலயத்திற்குச் சென்று), ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும். "மணிகம் ப்ரபத்யே" என்று தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி த்வாரபாலகர்களை வணங்கி, மூடியிருக்கும் கதவுகளைச் சாவியை எடுத்து "நிரஸ்தகும்" எனத்தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லியவாறு பூட்டைத் திறந்து, "ஹிரண்யபாணிம்" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லிக் கதவைத் திறக்கவேண்டும். "திவம் விஷ்ருணோது" என்கிற மந்த்ரத்தைச் சொல்லி உள்ளே நுழைந்து, விஷ்ணு மந்த்ரங்களைக்கூறி பகவானை வணங்க வேண்டும். "உத்தீப்யஸ்வ" என்ற மந்த்ரத்தைச் சொல்லி விளக்கைத் தூண்டி, "பகவதோ பலேன" என்கிற மந்த்ரத்தைச் சொல்லி பகவானை வணங்க வேண்டும்.

परिचारकाः स्नात्वा कुम्भमादाय, "दुहतांदिवं" इति गृहीत्वा, नद्यास्तोयं "आद्यमभि-गृह्णामीति सङ्गृह्य, तदभावे तटाके कूपे वा, "सोमं राजानं" इति आलयं प्रविश्य, धौतवस्त्रेण "धारास्विति" तोयमुत्पूय उशीरादि गन्धैर्वासयित्वा, "इदमापश्शिवा" इति कुशेनाभिमन्त्रयेत् । "अवधूतं" इति मार्जन्या मार्जयित्वा, "आशासु सप्त" इति गोमयेनोदकेन प्रोक्ष्य, उपलिप्य, "आमावाजस्य" इति प्रणिध्यर्घ्य पात्रं हविः पात्राणि प्रक्षाल्य, विधिना हवींषि च उपदंशांश्च पचेत् ।

பரிசாரகா: ஸ்நாத்வா கும்பமாதாய "துஹநாம் திவம்" இதி க்ருஹீத்வா, நத்யாஸ்தோயம் "ஆத்யமபிக்ருஹ்ணாமி" இதி ஸங்க்ருஹ்ய, தநபாவே தடாகே கூபே வா, "ஸோமம் ராஜானம்" இதி ஆலயம் ப்ரவிச்ய, தௌத வஸ்த்ரேண "தாராஸ்விதி" தோயமுத்பூய, உசீராதி கந்தைர்வாஸயித்வா, "இதமாபச்சிவா" இதி குசேனாபிமந்த்ரயேத். "அவதூதகும்" இதி மார்ஜன்யா மார்ஜயித்வா "ஆசாஸு ஸப்த" இதி கோமயேனோதகேன ப்ரோக்ஷ்ய, உபலிப்ய, "ஆமாவாஜஸ்ய" இதி ப்ரணித்யர்க்ய பாத்ரம் ஹவி: பாத்ராணி ப்ரக்ஷாள்ய, விதினா ஹவீம்ஷி ச உபதம்சாம்ச்ச பசேத்.

பொருள் : (கோவில்) பரிசாரகர் ஸ்நானம் செய்து, "துஹதாம்திவம்" என்ற மந்த்ரத்தைச் சொல்லி, குடத்தை எடுத்துக்கொண்டு ஆற்றிலோ, குளத்திலோ, கிணற்றிலோ (சென்று), "ஆத்யமபிக்ருஹ்ணாமி" என்ற மந்த்ரத்தைச் சொல்லி நீரை எடுத்துக்கொண்டு, "ஸோமம் ராஜானம்" என்ற மந்த்ரத்தைச் சொல்லிக்கொண்டு கோயிலுக்குத் திரும்பவேண்டும். உலர்ந்த துணியைக் கொண்டு "தாராஸு" என்ற மந்த்ரத்தைச் சொல்லி, கொண்டு வந்த நீரை வடிகட்டவேண்டும். விளாமிச்சைவேர், பச்சைக்கற்பூரம் முதலான தீர்த்த பரிமளங்களைச் சேர்த்து "இதமா பச்சிவா" என்ற மந்த்ரத்தைச்

சொல்லிக் கும்பத்தில் தர்பையைப் பிடித்துக்கொண்டு அபிமந்த்ரிக்க (மந்திரங்களைச் சொல்ல) வேண்டும். ''அவதூதகும்'' என்ற மந்த்ரத்தைச் சொல்லித் துடைப்பத்தால் கர்பக்ரஹத்தை (கருவறையை) நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டும். ''ஆசாஸு ஸப்த'' எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி கோமய ஜலத்தினால் சுத்தம் செய்யவேண்டும். ''ஆமாவாஜஸ்ய'' என்று தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி பஞ்ச பாத்ரங்கள் (பாத்ய பாத்ரம், அர்க்ய பாத்ரம், ஆசமன பாத்ரம், ஸ்நான பாத்ரம், சுத்த நீர் உள்ள பாத்ரம்) மற்றும் பூஜைக்குரிய அன்னத்தை (ப்ரசாதத்தை) வைக்கும் பாத்ரம் போன்றவைகளை சுத்தம் செய்து முறைப்படி அன்னம் (சாதம்) மற்றும் உபதம்சங்களும் சமைக்கவேண்டும்.

अर्चको ''ब्रह्म ब्रह्म'' इति हृदयमभिमृश्य, ''द्यौर्द्यौरसि'' इति शिरोऽभिमृश्य, ''शिखे'' इति शिखोद्वर्तनं, ''सकृद्देवानामायुधैः'' इति सर्वत्र रक्षां कृत्वा ''सुदर्शनं'' इति दक्षिणे हस्ते सुदर्शन मुद्रां धारयेत् । ''रविपां'' इति वामे शङ्ख मुद्रां धारयेत् ।

அர்ச்சகோ ''ப்ரம்ம ப்ரம்ம'' இதி ஹ்ருதயமபிம்ருச்ய. ''த்யௌர்த்யௌரஸி'' இதி சிரோபிம்ருச்ய, ''சிகே'' இதி சிகோத்வர்தனம் ''ஸக்ருத் தேவனாமாயுதை:'' இதி ஸர்வத்ர ரக்ஷாம் க்ருத்வா ''ஸுதர்சனம்'' இதி தக்ஷிணே ஹஸ்தே ஸுதர்சன முத்ராம் தாரயேத். ''ரவிபாம்'' இதி வாமே சங்க முத்ராம் தாரயேத்.

பொருள் : அர்ச்சகர் பூதசுத்தி செய்து கொள்ள வேண்டும். பின்வரும் மந்த்ரங்களைக் கூறி ஒவ்வொரு அங்கங்களையும் மானஸிகமாக சுத்தம் செய்து கொள்ளவேண்டும். ''பிரம்ம பிரம்ம'' எனத் தொடங்கும் மந்த்ரத்தால் ஹ்ருதயத்தைத் தொடவேண்டும். ''த்யௌர் த்யௌரஸி'' என்ற மந்த்ரத்தால் தலையைத் தொடவேண்டும். ''சிகே'' எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி தலைமுடியைத் தொடவேண்டும். ''ஸக்ருத் தேவானாமாயுதை:'' என்ற மந்த்ரத்தால் எல்லா இடங்களுக்கும் (உடலில் உள்ள அனைத்து பாகங்களுக்கும்) ரக்ஷையைச் செய்து, ''ஸுதர்சனம்'' எனத் தொடங்கும் மந்த்ரத்தைக் கூறி ஸுதர்சன முத்ரையை வலது கையில் தரித்துக் கொள்ள வேண்டும். ''ரவிபாம்'' எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி சங்கு முத்ரையை இடது கையில் தரித்துக் கொள்ள வேண்டும்.

''सूर्योऽसि'' इति दक्षिण नयने, ''चन्द्रोऽसि'' इति वाम नयने हस्तयोस्तलयोः दक्षिण वामयोः सूर्यचन्द्रमसोः मण्डलं न्यस्य । ''आभुरण्यं'' इति अङ्गुष्ठादि कनिष्ठान्तं न्यस्य । ''अन्तरस्मिन्निम'' इति ब्रह्माणं स्मरति । ''अहमेवेदं'' इति देवमनुमान्य, पूतस्तस्येति निर्माल्यं व्यपोह्य, पीठवेदिमद्भिर्व्याहृत्या परिमार्ज्य ''नारायणाय विद्महे'' इति ध्रुवस्य पादपुष्पं पञ्चभिः

मूर्तिभिः दत्वा, देवेशस्य निर्माल्यं विष्वक्सेनाय दत्वा अन्येषां बहिर्विसर्जयेत् । "भूःप्रपद्ये" इति देवेशं प्रणम्य, आलयद्वारोत्तरपार्श्वे पूर्वे वा प्रथमावरणे स्नानपीठे "परं रंह" इत्यवस्थाप्य "इषेत्वोर्जेत्वा" इति जपन् बिम्बं यथाशुद्धं आम्लाद्यैः संशोध्य, शुद्धोदकैस्संस्नाप्य, चन्दनोदकैरभिषिच्य, धौतप्लोत वस्त्रेण मूर्धाद्यैः विमृजेत् । परिमृष्टेऽर्चापीठे देवेशं प्रतिष्ठाप्य, वस्त्राभरणोपवीतैरलङ्कुर्यात् । पवित्र पाणिः चन्दनाद्यैः* ऊर्ध्वपुण्ड्रं धृत्वा, "संयुक्तमेतत्" इति ध्रुव कौतुकयोः मध्ये सम्बन्ध कूर्चं (कौतुकाग्रं) प्रक्षिप्य, विष्णुगायत्र्या पीठं प्रोक्ष्य ध्रुवपादयोः मध्ये "विष्णवे नम" इति पुष्पं दद्यात् ।

"ஸூர்யோ஽ஸி" இதி தக்ஷிண நயனே, "சந்த்ரோ஽ஸி" இதி வாம நயனே, ஹஸ்தயோஸ்தலயோ: தக்ஷிண வாமயோ: ஸூர்யா சந்த்ரமஸோ: மண்டலம் ந்யஸ்ய. "ஆபுரண்யம்" இதி அங்குஷ்டாதி கனிஷ்டாந்தம் ந்யஸ்ய. "அந்தரஸ்மின்னிம" இதி ப்ரம்மாணம் ஸ்மரதி. "அஹமேவேதம்" இதி தேவமனுமான்ய பூதஸ் தஸ்யேதி நிர்மால்யம் வ்யபோஹ்ய, "பீடவேதிமத்பிர் வ்யாஹ்ருத்யா பரிமார்ஜ்ய "நாராயணாய வித்மஹே" இதி த்ருவஸ்ய பாத புஷ்பம் பஞ்சபி: மூர்த்திபி: தத்வா, தேவேசஸ்ய நிர்மால்யம் விஷ்வக்ஸேனாய தத்வா அன்யேஷாம் பஹிர் விஸர்ஜயேத். "பூ: ப்ரபத்யே" இதி தேவேசம் ப்ரணம்ய, ஆலயத்வாரோத்தர பார்ச்வே பூர்வே வா ப்ரதமாவரணே ஸ்நான பீடே "ப்ரம்ரம்ஹ" இத்யவஸ்தாப்ய, "இஷேத்வோர்ஜேத்வா" இதி ஜபன் பிம்பம் யதா சுத்தம் ஆம்லாத்யை: ஸம்சோத்ய சுத்தோதகைஸ் ஸம்ஸ்நாப்ய, சந்தனோதகைரபிஷிச்ய, தௌத ப்லோத வஸ்த்ரேண மூர்த்தாத்யம் விம்ருஜேத். பரிம்ருஷ்டேர்ச்சா பீடே தேவேசம் ப்ரதிஷ்டாப்ய, வஸ்த்ராபரணோபவீதைரலங்குர்யாத். பவித்ரபாணி: சந்தனாத்யை:[1] ஊர்த்வ புண்ட்ரம் த்ருத்வா, "ஸம்யுக்தமேதத்" இதி த்ருவ கௌதுகயோ: மத்யே ஸம்பந்த கூர்ச்சம் (கௌதுகாக்ரம்) ப்ரக்ஷிப்ய, விஷ்ணு காயத்ர்யா பீடம் ப்ரோக்ஷ்ய, த்ருவ பாதயோ:, மத்யே "விஷ்ணவே நம" இதி புஷ்பம் தத்யாத்:

பொருள்: "ஸூர்யோ஽ஸி" என்ற மந்த்ரத்தைச் சொல்லி வலது கண்ணில் சூரியனையும், "சந்த்ரோ஽ஸி" என்ற மந்த்ரத்தைச் சொல்லி இடது கண்ணில் சந்த்ரனையும் ஆவாஹனம் செய்துகொள்ளவேண்டும். இவ்வாறு அங்கந்யாஸம் முடிந்த பிறகு, "ஆபுரண்யம்" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி கரந்யாஸம் செய்துகொள்ளவேண்டும். "அந்தரஸ்மின்னிம" எனத்

---

* मृदा कुर्याज्जपेकाले सन्ध्याकाले तु वारिणा ।
भस्मना होमकाले तु अर्चाकाले तु चन्दनम् ॥

1 ம்ருதா குர்யாஜ்ஜபேகாலே ஸந்த்யா காலேது வாரிணா ।
பஸ்மனா ஹோம காலேது அர்ச்சா காலேது சந்தனம் ॥

தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி ப்ரம்மாவை த்யானிக்க வேண்டும். முதல் நாள் (நேற்று) பெருமாளின் மீது அணிவித்திருந்த புஷ்பங்களை "பூதஸ்தஸ்ய" என்ற மந்த்ரத்தைச் சொல்லி களைய அனுமதி பெற்று, "அஹமேவேதம்" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி. பீடவேதிகையை (பூர்புவஸ்ஸுவ: என்ற) வ்யாஹ்ருதியைச் சொல்லி சுத்தம் செய்யவேண்டும், "நாராயணாய" எனத்தொடங்கும் விஷ்ணு காயத்ரியைச் சொல்லி த்ருவபேரத்தின்[1] பாதத்தில் உள்ள பழைய புஷ்பங்களை எடுத்து பஞ்ச பேரங்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். பெருமாளின் புஷ்பங்களை விஷ்வக்ஸேனரிடம் சமர்ப்பிக்க வேண்டும். மற்ற பரிவாரங்களிலுள்ள புஷ்பங்களைக் களைந்துவிட வேண்டும். "பூ: பரபத்யே" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி பெருமாளை வணங்க வேண்டும். ஆலயத்தின் வடக்குப் பக்கத்தில் முதல் ப்ராகாரத்தில் உள்ள ஸ்நான பீடத்தில் "ப்ரம்ம்ஹ" எனத் தொடங்கும் மந்த்ரத்தைக் கூறி பெருமாளை அங்கு கொண்டுபோய் எழுந்தருளப் பண்ணி, "இஷேத்வோர்ஜேத்வா" முதலிய மந்த்ரங்களை ஜபித்து பிம்பத்தினை சாம்பல், புளி ஜலம், மணல், நெல்லிக்காய், மாவிலையைக் கருக்கி பெறப் பெற்ற கரி போன்றவற்றால் நன்றாக சுத்தம் செய்து நீரினால் குளிக்கச் செய்ய வேண்டும். (பிறகு) சந்தன நீரினால் அபிஷேகம் (திருமஞ்சனம்)செய்து உலர்ந்த வஸ்த்ரத்தால் சுத்தமாகத் துடைக்க வேண்டும். பிறகு வ்யாஹ்ருதியினாலே முன்னர் சுத்தம் செய்யப்பட்ட அர்ச்சா பீடத்தில் பெருமாளை எழுந்தருளப் பண்ணவேண்டும். பெருமாளுக்கு வஸ்த்ரம், ஆபரணம், யக்ஞோபவீதம் போன்றவற்றால் அலங்காரம் செய்யவேண்டும். பவித்ரத்தை தரித்துக்கொண்டு சந்தனம்[2] போன்றவைகளால் ஊர்த்வ புண்ட்ரம் தரித்துக் கொண்டு, "ஸம்யுக்தமேதத்" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி, த்ருவ பேரத்திற்கும்[3], கௌதுக பேரத்திற்கும் நடுவில் கௌதுகரை நோக்கி நுனியானது இருக்குமாறு சம்பந்த கூர்ச்சம் சேர்த்து. பிறகு விஷ்ணு[4] காயத்ரியைச் சொல்லி பீடத்தை ப்ரோக்ஷிக்க வேண்டும். பிறகு "விஷ்ணவே நம:" எனத் தொடங்கும் மந்த்ரத்தினால் த்ருவ பேரத்தின் பாதத்தில் புஷ்பத்தைச் சேர்க்கவேண்டும்.

---

1. த்ருவ பேரம் — கருவறையிலேயே இருக்கும் மூர்த்திக்குப் பெயர்.

2. ஜபம் செய்யும் போது (இரு) மண்ணாலும், ஸந்த்யாவந்தனம் செய்யும்பொழுது ஜலத்தாலும், ஹோமம் செய்யும்பொழுது பஸ்மத்தாலும், பூஜை செய்யும்பொழுது சந்தனத்தாலும் ஊர்த்வ புண்ட்ரம் தரித்துக் கொள்ள வேண்டும்.

3. த்ருவ பேரம் — மூலவர், கௌதுக பேரம் — மூலவரை விட்டுப் பிரியாத மூர்த்தமாகும்.

4. "நாராயணாய" எனத் தொடங்கும் மந்த்ரம்.

प्रागादिप्रदक्षिणं चतुर्दिक्षु पुरुषाय, सत्याय, अच्युताय, अनिरुद्धाय इति क्रमेण पुष्पाणि न्यसेत् । आग्नेय्यादिकोणेषु कपिलाय, यज्ञाय, नारायणाय, पुण्याय इति परितः प्रागाद्यैशानान्तं वराहाय, शुभद्राय, नारसिंहाय, ईशितात्मने, वामनाय, सर्वोद्वहाय, त्रिविक्रमाय, सर्वविद्येश्वराय इति अष्टदिक्षु न्यस्य, पीठादधः परितः पूर्वात् इन्द्राय, अग्नये, यमाय, निर्ऋतये, वरुणाय, वायवे, कुबेराय, ईशानाय इति तत्तद्देशे तत्तन्नाम्ना प्रणवादि नमोऽन्तं पुष्पन्यासं ध्रुवेस्थिते करोति ।

ப்ராகாதி ப்ரதக்ஷிணம் சதுர்திக்ஷு புருஷாய, சத்யாய, அச்யுதாய, அநிருத்தாய இதி க்ரமேண புஷ்பாநிந்யஸேத். ஆக்னேய்யாதி கோணேஷு "கபிலாய, யக்ஞாய, நாராயணாய, புண்யாய" இதி பரித: ப்ராகாத்யை-சானாந்தம் வராஹாய, ஸுபத்ராய, நாரஸிம்ஹாய, ஈசிதாத்மனே, வாமனாய, ஸர்வோத்வஹாய, த்ரிவிக்ரமாய, ஸர்வவித்யேஸ்வராய இதி அஷ்டதிக்ஷு ந்யஸ்ய, பீடாதத: பரித: பூர்வாத் இந்த்ராய, அக்னயே, யமாய, நிர்ருதயே, வருணாய, வாயவே, குபேராய, ஈசானாய இதி தத்தத்தேசே தத்தந் நாம்னா ப்ரணவாதி நமோந்தம் புஷ்பந்யாஸம் த்ருவே ஸ்திதே கரோதி ।

பொருள்: *கிழக்கு முதல் ப்ரதக்ஷிணமாக நான்கு திக்குகளிலும் ஓம் புருஷாய நம:, ஓம் ஸத்யாய நம:, ஓம் அச்யுதாய நம:, ஓம் அநிருத்தாய நம: என்று கூறி புஷ்பங்களைச் சேர்க்க வேண்டும். அக்னி முதலான கோணங்களில் ஓம் கபிலாய நம:, ஓம் யக்ஞாய நம:, ஓம் நாராயணாய நம:, ஓம் புண்யாய நம: என்று சொல்லி புஷ்பங்களைச் சேர்க்க வேண்டும். இரண்டாவது ஆவரணத்தில் (சுற்றில்) கிழக்கு முதல் பிரதக்ஷிணமாக நான்கு திக்குகளில் ஓம் வராஹாய நம:, ஓம் நாரஸிம்ஹாய நம: ஓம் வாமனாய நம:, ஓம் திரிவிக்ரமாய நம: என்று கூறி புஷ்பங்களைச் சேர்க்க வேண்டும். அடுத்துள்ள ஆக்னேயாதி கோணங்களில் ஓம் ஸுபத்ராய நம:, ஓம் ஈசிதாத்மனே நம:, ஓம் ஸர்வோத்வ-ஹாய நம:, ஓம் ஸர்வ வித்யேஸ்வராய நம: என்று சொல்லி புஷ்பங்களைச் சேர்க்க வேண்டும். மூன்றாவது (சுற்றில்) ஆவரணத்தில் கிழக்கு முதல் எட்டு திக்குகளுக்கும் ஓம் இந்த்ராய நம:, ஓம் அக்னயே நம:, ஓம் யமாய நம:, ஓம் நிர்ருதயே நம:, ஓம் வருணாய நம:, ஓம் வாயவே நம:, ஓம் குபேராய நம:, ஓம் ஈசானாய நம: என்று அந்தந்த இடத்தில் அந்தந்த நாமங்களைச் சொல்லி த்ருவ பேரத்தின் பீடத்தில் புஷ்ப ந்யாஸம் செய்ய வேண்டும்.*

आसीने प्रसारितपादस्य परितः शयानेऽप्यन्तोर्ध्वे, पादपार्श्वे कुर्यात् । देव्योश्च नाम मन्त्रैः कौतुकपीठे प्राच्यादि "मित्रं, अत्रिं, शिवं, विश्वं इति उत्तरान्तं, आग्नेयादि कोणेषु सनातनं, सनन्दनं, सनत्कुमारं, सनकमित्यैशानान्तञ्च एकादशोपचारैः वा नाम्ना बहिर्मुखानभ्यर्च्य

दक्षिणे मार्कण्डेयं उत्तरे भृगुं, तदुत्तर पार्श्वे ब्रह्माणं शङ्करञ्च द्वारे द्वारे धात्रादि द्वार देवान् द्वारपालान् श्रीभूतवीशामिताँश्चान्यपरिवारान् यथोक्ते देशे पूर्ववदर्चयति ।

ஆஸீனே ப்ரஸாரித பாதஸ்ய பரித: சயானே஽ப்யனந்தோர்த்வே, பாத பார்ச்வே குர்யாத். தேவ்யோச்ச நாம மந்த்ரை: கௌதுக பீடே ப்ராச்யாதி மித்ரம், அத்ரிம், சிவம், விச்வம், இதி உத்தராந்தம், ஆக்னேயாதி கோணேஷு ஸநாதனம், ஸநந்தனம், ஸநத்குமாரம், ஸநகமித்யைசானாந்தஞ்ச ஏகாதசோபசாரை: வா நாம்நா பஹிர்முகானப்யர்ச்ய தக்ஷிணே மார்க்கண்டேயம், உத்தரே ப்ருகும், ததுத்தர பார்ச்வே, ப்ரம்மாணம் சங்கரஞ்ச த்வாரே த்வாரே தாத்ராதி த்வார தேவான் த்வாரபாலான் ஸ்ரீபூதவீசாமிதாகும்ச்சான்ய பரிவாரான் யதோக்தே தேசே பூர்வவதர்ச்சயதி.

பொருள் : பெருமாள் உட்கார்ந்திருந்த நிலையில் இருந்தால் தொங்க விட்டுக் கொண்டிருக்கிற திருவடியைச் சுற்றியும், பெருமாள் அனந்த சயனத்தில் இருந்தால் திருவடிக்கு அருகேயும் புஷ்பத்தைச் சேர்க்க வேண்டும். கௌதுகருடைய பீடத்தில் கிழக்கு முதல் ஓம் மித்ராய நம:, ஓம் அத்ரயே நம: ஓம் சிவாய நம:, ஓம் விச்வாய நம: என்ற நாமாவளிகளைக் கூறி புஷ்பத்தைச் சேர்க்க வேண்டும். அக்னி முதலான திக்குகளில் ஓம் ஸநாதனாய நம: ஓம் ஸநந்தனாய நம:, ஓம் ஸநத்குமாராய நம:, ஓம் ஸநகாய நம: என்றுக் கூறி புஷ்பத்தைச் சேர்த்து பதினோறு உபசாரங்களையாவது அல்லது நாமாவளிகளை மட்டும் கூறியாவது வெளிமுகமாகப் பார்த்துக்கொண்டு இருப்பவர்களாக த்யானித்து அர்ச்சிக்க வேண்டும். தெற்கில் ஓம் மார்க்கண்டேயாய நம:, வடக்கில் ஓம் ப்ருகவே நம:, மேற்கில் ஓம் ப்ரம்மணே நம: கிழக்கில் ஓம் சங்கராய நம: என்றுக் கூறி புஷ்பம் சேர்க்க வேண்டும். ஒவ்வொரு வாயிலுக்கும் வாயிற்காவல் தேவதைகளை முன்னே கூறியபடி அர்ச்சிக்க வேண்டும்.

आवाहन पाद्याऽऽचमनस्नानोदकार्थाश्चतस्र: प्रणिध्योर्द्वे च एकैकं वा गृहीत्वा, साक्षतकाश (कुश) कूर्चान् विक्षिप्य, अद्भिः प्रणवेन पूरयित्वा, कुडुब संपूर्णाऽर्घ्यपात्राणि सौवर्ण रजत, ताम्र, मृण्मय कांस्याऽन्यतमानि पश्चालाभे, तदेकं वा तद्देवं चन्द्रमभ्यर्च्य, पात्राणि संशोध्य, तण्डुल व्रीहि, माष, सर्षप मिश्रितं अक्षतं प्राहुः ।

ஆவாஹன பாத்யாசமன ஸ்நானோதகார்த்தாச்சதஸ்ர: ப்ரணித்யோர்த்வேச ஏகைகம் வா க்ருஹித்வா, ஸாக்ஷதகாச (குச) கூர்ச்சான் விக்ஷிப்ய, அத்பி: ப்ரணவேன பூரயித்வா, குடுப சம்பூர்ணா஽ர்க்ய பாத்ராணி ஸௌவர்ண, ரஜத, தாம்ர, ம்ருண்மய காம்ஸ்யான்யதமானி பஞ்சாலாபே, ததேகம் வா தத்தத்தேவம் சந்த்ரமப்யர்ச்ய, பாத்ராணி ஸம்ஸோத்ய, தண்டுல, வ்ரீஹி, மாஷ ஸர்ஷபமிச்ரிதம் அக்ஷதம் ப்ராஹு:.

பொருள்: பாத்யபாத்ரம், ஆசமன பாத்ரம் ஸ்நான பாத்ரம், அர்க்ய பாத்ரம் ஆகிய நான்கையும் வைக்கக் கூடிய பாத்திரத்தின் மேல் அக்ஷதையுடன் சேர்த்து, தர்பையினாலான கூர்ச்சத்தை வைக்க வேண்டும். ப்ரணவ மந்த்ரத்தைச் சொல்லி அர்க்ய பாத்திரமானது எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவு நீரை நிரப்ப வேண்டும். தங்கம், வெள்ளி, தாமிரம், மண்,[1] வெண்கலம் மற்றும் பஞ்சலோக பாத்ரம் ஆகிய அனைத்திலும் ஏதேனும் ஒரு உலோக பாத்திரத்தில் சந்த்ரனை ஆவாஹனம் செய்ய வேண்டும். அர்க்ய பாத்ரம் முதலானவைகளை நன்கு சுத்தம் செய்துகொண்டு, அர்க்ய பாத்திரத்தில் தர்பை, அக்ஷதை, எள், யவதான்யம், உளுந்து, மிளகு போன்றவைகளைச் சேர்க்க வேண்டும். அரிசி, நெல், உளுந்து, வெண்கடுகு சேர்ந்தது அக்ஷதை என்பர் ஆன்றோர்கள்.

तत्पूर्वं सिद्धार्थकं, तिलं, कुशाग्रं, दधि, क्षीर, घृतं च प्रक्षिप्य, गायत्र्याधावेन पूरयति अर्घ्यमेतत् । पात्रे पुष्पाण्यादाय, जलेनपिष्टं चन्दनं गन्ध गुग्गुल्वगरु काष्ट चन्दन घनगुल मिश्राणि यथा लाभं धूपार्थं पिचुवर्तियुतं घृतेन, तैलेन वा दीपञ्च संभारान् संभरति ।

தத்பூர்வம் ஸித்தார்த்தகம், திலம், குசாக்ரம், ததி, க்ஷீர, க்ருதம் ச ப்ரக்ஷிப்ய. காயத்ர்யாதாவேன பூரயதி அர்க்யமேதத். பாத்ரே புஷ்பாண்யாதாய, ஜலேன பிஷ்டம் சந்தனம், கந்த குக்குல்வகருகாஷ்ட சந்தனகனகுல மிச்ராணி யதாலாபம் தூபார்த்தம் பிசுவர்த்தியுதம் க்ருதேன தைலேன வா தீபஞ்ச ஸம்பாரான் ஸம்பரதி.

தீர்த்தம் சேர்ப்பதற்கு முன்பு, தீர்த்த பாத்திரத்தில் வெண்கடுகு, எள், தர்ப்பையின் நுனி, தயிர், பால், நெய் ஆகியவைகளைச் சேர்த்து, காயத்ரியைச் சொல்லி நீரை நிரப்பவேண்டும். அர்க்ய பாத்ரமான இதில் புஷ்பங்களைச் சேர்க்கவேண்டும். தூபம் சமர்ப்பிக்கும் பொருட்டு நீருடன் கலந்த சந்தனம், வாசனை நிரம்பிய குங்கிலியம், அகில் கட்டைத்துண்டு, பச்சைக்கற்பூரம், ஆகிய அனைத்தையும் முடிந்த அளவு சேகரித்து வைத்துக் கொள்ளவேண்டும். தீபம் சமர்ப்பிப்பதின் பொருட்டு திரி, நெய் அல்லது எண்ணெய் ஆகியவற்றைச் சேகரித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

---

1. மண் பாத்திரத்தை அர்க்ய பாத்ரமாகப் பயன்படுத்தும் வழக்கமில்லை. (கும்பாபிஷேகங்களில்) ஸம்ப்ரோக்ஷணைகளில் மட்டும்தான் அதிலும் விசேஷமாக பரிவார கலசங்களாக மட்டுமே பயன்படுத்தும் வழக்கம் உள்ளது.

सूतादि प्रतिलोमाः, पतिताः, पाषण्डिनोऽपि अर्चनं हविर्निवेदनञ्च वीक्षितुं नैवार्हन्ति । तस्माद्यवनिकया समावृणोति । स्वस्तिकमेकजानुं वा समासीन उदङ्मुखः पार्श्वे बिम्बार्हं तिष्ठन् वा प्रणम्य, आत्मसूक्तं जप्त्वा बिम्बस्य मूर्धनाभिपादेषु क्रमेण "सुवर्भुवर्भूः" इति विन्यस्य, हृदये प्रणवेनाऽऽदि बीजाक्षरं च, पादमध्ये पीठे यकारं विन्यस्य, प्रणिधिमुद्धृत्य, दीपाद्दीपमिव ध्रुवबेरात् प्रणिधि जले प्रणवात्मकं विष्णुं रुक्माभं रक्तनेत्राऽऽस्यं पाणिपादं चतुर्भुजं शङ्खचक्रधरं शुकपिञ्छाम्बरधरं किरीटकेयूरहारमकरकुण्डलकटकाङ्गुलीयककटिसूत्रोदरबन्धप्रलम्बयज्ञोपवीतिनं श्रीवत्साङ्कं एवं सकलं ध्यात्वा, कूर्चेन "इदं विष्णुः" "आयातु भगवान्" इत्यावाह्य, तद्व्याप्तं तोयं प्रणवेन कौतुकमूर्ध्नि "विष्णुमावाहयामि" इति संश्राव्य "पुरुषं, सत्यमच्युतमनिरुद्धं" इति मन्त्रैः आवाहयेत् ।

ஸூதாதி ப்ரதிலோமா:, பதிதா:, பாஷண்டினோऽபி அர்ச்சனம் ஹவிர் நிவேதனஞ்ச வீக்ஷிதும் நைவார்ஹந்தி. தஸ்மாத்யவனிகயா ஸமாவ்ருணோதி. ஸ்வஸ்திக மேக ஜானும் வா ஸமாஸீன உதங்முக பார்ச்வே பிம்பார்ஹம் திஷ்டன் வா ப்ரணம்ய, ஆத்ம ஸூக்தம் ஜப்த்வா பிம்பஸ்ய மூர்த்தாநாபி பாதேஷு க்ரமேண "ஸுவர்புவர்பூ:" இதி விந்யஸ்ய, ஹ்ருதயே ப்ரணவேனாதி பீஜாக்ஷரம் ச, பாதமத்யே பீடே யகாரம் விந்யஸ்ய, ப்ரணிதி முத்ருத்ய, தீபாத்தீபமிவ த்ருவ பேராத் ப்ரணிதி ஜலே ப்ரணவாத்மகம் விஷ்ணும் ருக்மாபம் ரக்த நேத்ராஸ்யம் பாணிபாதம் சதுர்புஜம் சங்க சக்ர தரம் சுகபிஞ்சாம்பரதரம் கிரீட கேயூர ஹார மகர குண்டல கடகாங்குலீயகடி-ஸூத்ரோதரபந்த ப்ரலம்ப யக்ஞோபவீதினம் ஸ்ரீவத்ஸாங்கம் ஏவம் சகலம் த்யாத்வா, கூர்ச்சேன "இதம் விஷ்ணு:" "ஆயாது பகவான்" இத்யாவாஹ்ய தத்வ்யாப்தம் தோயம் ப்ரணவேன கௌதுக மூர்த்னி "விஷ்ணுமாவாஹயாமி" இதி ஸம்ஸ்ராவ்ய "புருஷம் ஸத்யமச்யுதமநிருத்தம்" இதி மந்த்ரை: ஆவாஹயேத்.

பொருள்: பகவானுக்குச் செய்யும் பூஜையினை ஸூதாதயர்கள் பார்க்கக் கூடாதாகையாலே பூஜை நடக்கும் பொழுது திரையிடப்படுகிறது. பெருமாளுக்கு அருகில் வடக்கு முகமாக ஸ்வஸ்திகாஸனத்தில் அமர்ந்து அல்லது நின்றுகொண்டு, "ஆத்ம ஸூக்தத்தைச்" சொல்லி, "ஸுவ:" என்று சொல்லி தலையையும், "புவ:" என்றுக் கூறி நாபிப் பகுதியையும், "பூ:" என்றுக் கூறி பாதத்தையும் தொட்டு த்யானித்து, ஹ்ருதயத்தில் ப்ரணவ பீஜாக்ஷரத்தையும், பீடத்தில் "ய" காரத்தையும் த்யானித்து, பிறகு ஜலம் சேர்த்த ப்ரணிதி பாத்ரத்தில் ஒரு தீபத்திலிருந்து மற்றொரு தீபத்தை ஏற்றுவது போல த்ருவ பேரத்திலிருந்து ப்ரணிதி ஜலத்தில் ப்ரணவாத்மகமான விஷ்ணுவை (தாமரை போன்ற) சிவந்த கண்கள், கால்கள், நான்கு கைகள், சங்கு, சக்கரம், மயிலிறகு தலையில் தரித்தவர், மோதிரங்கள் அணிந்தவர், கடிசூத்திரம் அணிந்தவர்,

முப்புரிநூல் அணிந்தவர், லக்ஷ்மியை மார்பில் தாங்கியவர் போன்ற விசேஷகங்களோடு கூடியவராக த்யானித்து கூர்ச்சத்தினால் "இதம் விஷ்ணு:" "ஆயாது பகவான்" என்று தொடங்கக் கூடிய இரண்டு மத்ரங்களையும் சொல்லி ஆவாஹனம் செய்ய வேண்டும். ஆவாஹனம் செய்யப்பட்ட ப்ரணிதி ஜலத்தினை மூல மந்த்ரத்தைக்கொண்டு கௌதுகருடைய சிரஸில் விஷ்ணுமாவாஹயாமி, புருஷமாவாஹயாமி, ஸத்யமாவாஹயாமி, அச்யுதமாவாஹயாமி, அநிருத்தமாவாஹயாமி என்று ஆவாஹநம் செய்ய வேண்டும்.

तथा स्नापेन च उत्सवे च दक्षिणे श्रियं, वामे महीमावाहयेत् । स्नापने च उत्सवे च आदावेवाऽऽवाहनं नित्यं नेति केचित् । तत्रासीनं देवं ध्यायन् पीठान्ते "प्रतद्विष्णु:" "अस्त्वासनं" इति पुष्पं दर्भं वा आसनं सङ्कल्पयेत् । "विश्वाधिकानां" इत्यभिमुखं स्वागतं ब्रूयात् ।

ததா ஸ்நாபனே ச உத்ஸவே ச தக்ஷிணே ச்ரியம், வாமே மஹீமாவாஹயேத். ஸ்நாபனே ச உத்ஸவே ச ஆதாவேவாऽऽவாஹனம் நித்யம் நைவேதி கேசித். தத்ராஸீனம் தேவம் த்யாயன் பீடாந்தே "ப்ரதத்விஷ்ணு" "அஸ்த்வாஸநம்" இதி புஷ்பம் தர்பம் வா ஆஸனம் ஸங்கல்பயேத். "விச்வாதிகானாம்" இதி அபிமுகம் ஸ்வாகதம் ப்ரூயாத்.

பொருள்: அப்படியே ஸ்நபன பேரத்திற்கும், உத்ஸவ பேரத்திற்கும் வலப்புறத்தில் "ஓம் ச்ரியை நம:", இடப்புறத்தில் "ஓம் மஹ்யை நம:" என்றும் ஆவாஹனம் செய்யவேண்டும். ஸ்நபன பேரத்திற்கும், உத்ஸவ பேரத்திற்கும் ஜலாவாஹனம் கிடையாது என்பது சிலர் கருத்து. பிறகு எம்பெருமானை த்யானம் செய்து, "ப்ரதத்விஷ்ணுஸ்தபத", "அஸ்த்வாஸனம்" என்பதாகத் தொடங்கும் இரு மந்த்ரங்களையும் கூறி புஷ்பத்தையோ, தர்ப்பத்தையோ பீடத்தில் சேர்த்து ஆஸனம் கல்பிக்கவேண்டும். "விச்வாதிகானாம்" எனத் தொடங்கும் மத்ரத்தைச் சொல்லி பகவானுக்கு நல்வரவு நல்க வேண்டும்,

"मनोऽभिमन्ता" इति अर्चनानुमानं याचेत् । "त्रीणि पदा", "इन्द्रोऽभिमन्ता" इति पादयोः शङ्खाग्रेण, कूर्चेन वा पाद्यजलं दद्यात् । "शन्नोदेवी:" इति तथा दक्षिणहस्ते तोयमाचमनीयं दद्यात् । "तद्विष्णोः परमं पदं" इति "इमास्सुमनस" इति मूर्ध्नि भुजयोः शङ्खचक्रयोः पादयोश्च पुष्पं दद्यात् । "तद्विप्रास", इमेगन्धा इति ललाटे गन्धेन ऊर्ध्वपुण्ड्रमालिख्य, बाह्वोर्वक्षसि कण्ठेनाभेरूर्ध्वं वा तेनालङ्कराति ।

"மனோऽபிமந்தா" இதி அர்ச்சனானுமானம் யாசேத். த்ரீணிபதா", "இந்த்ரோऽபிமந்தா" இதி பாதயோ: சங்காக்ரேண கூர்ச்சேன வா பாத்ய ஜலம் தத்யாத். "சன்னோ தேவீ:" இதி ததா தக்ஷிணஹஸ்தே தோயமாசமனீயம் தத்யாத். "தத்விஷ்ணோ: பரமம்பதம்" இதி "இமாஸ்ஸுமனஸ"

இதி மூர்த்னி புஜயோ: சங்க சக்ரயோ: பாதயோச்ச புஷ்பம் தத்யாத். "தத்விப்ராஸ", "இமேகந்தா", இதி லலாடே கந்தேன ஊர்த்வாக்ரமாலிப்ய, பாஹ்வோர் வக்ஷஸி கண்டேநாபேருர்த்வே வா மேதனாலங்கரோதி.

பொருள் : "மனோபிமந்தா" என்று தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி பூஜை செய்வதற்கு பகவானிடம் அனுமதி பெற வேண்டும். "தரீணிபத", "இந்த்ரோபிமந்தா" என்பதாகத் தொடங்கும் மந்த்ரங்களைச் சொல்லி சங்கினாலோ, சுக்ரத்தினாலோ திருவடியில் பாத்யஜலம் சமர்ப்பிக்க வேண்டும். அப்படியே "சன்னோதேவீ:" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி வலது கையில் ஆசமன ஜலம் சமர்ப்பிக்க வேண்டும். "தத்விஷ்ணோ: பரமம் பதம்", "இமாஸ்ஸுமனஸ:" என்பதாகத் தொடங்கும் இரு மந்த்ரங்களையும் கூறி தலை, தோள்களிலும், சங்கு, சக்ரம், திருவடி ஆகிய இடங்களிலும் புஷ்பம் சமர்ப்பிக்க வேண்டும். "தத் விப்ராஸ", "இமேகந்தா" என்கின்ற மந்த்ரங்களைக் கூறி சந்தனத்தை நெற்றியில் ஊர்த்வ முகமாக இடவேண்டும். கை, மார்பு, கழுத்து, வயிறு ஆகிய இடங்களிலும் ஊர்த்வ முகமாகச் சந்தனத்தை இடலாம்.

"परोमात्रया", "बृहस्पतिः", "इमेधूपा" इति चतुर्दिक्षु धूपयेद् धूपम् । "विष्णोः कर्माणि", "शुभ्राज्योतिः" इति पार्श्वे दर्शयेद्दीपम् । "अग्निरिन्द्रे" इत्यभिमृश्य पात्रमुद्धृत्य "त्रिर्देव", "इन्द्रियाणि शतक्रतो" इति मधुपर्कवदर्घ्यं निवेदयेत् ।

"பரோமாத்ராயா". "ப்ருஹஸ்பதி:", "இமேதூபா". இதி சதுர்திக்ஷு தூபயேத்தூபம். "விஷ்ணோ: கர்மாணி", "சுப்ராஜ்யோதி:" இதி பார்ச்வே தர்சயேத்தீபம் "அக்னிரிந்த்ரே" இத்யபிம்ருச்ய பாத்ரமுத்ருத்ய "த்ரிர்தேவ", "இந்த்ரியாணி சதக்ரதௌ" இதி மதுபர்க்கவதர்க்யம் நிவேதயேத்.

பொருள் : "பரோமாத்ரயா", "ப்ருஹஸ்பதி:", "இமேதூபா" என்று தொடங்கும் மந்த்ரங்களைக்கூறி பெருமாளுக்கு தூபம் சமர்ப்பிக்கவேண்டும். "விஷ்ணோ: கர்மாணி", "சுப்ராஜ்யோதி:" என்று தொடங்கும் இரு மந்த்ரங்களையும் கூறி பெருமாளுக்கு தீபம் (காண்பிக்க) சமர்ப்பிக்கவேண்டும். "அக்னிரிந்த்ரே" என்ற மந்த்ரத்தைச் சொல்லி பாத்ரத்தைத் தொட்டு, உத்தரணியால் தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு, "த்ரிர்தேவ", "இந்த்ரியாணி" சதக்ரதௌ" என்ற மந்த்ரங்களைக் கூறி மதுபர்க்கம்போல் அர்க்யம் சமர்ப்பிக்கவேண்டும்.

द्रव्यालाभे तोयं, (यथोक्त) पात्रालाभे अक्षतं कूर्चेन तोयं वा पूर्ववदाचमनं दद्यात् । "आपोहिष्ठा" इति स्नानायाभ्युक्षणं कृत्वा, "मित्रस्सुवर्ण" इति प्लोतं, "तेजोवत्सव" इति वस्त्रं, "भूतो भूतेषु" इति आभरणं, "सोमस्य तनूरसी" इति उत्तरीयम् । "अग्निं दूतं"

इति उपवीतं दद्यात् । तत्तद्द्रव्यं ध्यायन् तत्तदङ्गेषु पुष्पं वा दद्यात् । पूर्ववत् पाद्यार्घ्याचमन पुष्पगन्धधूपदीपाचमनानि पञ्चमूर्तिमन्त्रैः द्रव्यनाम संयोज्य "ददामि" इति दद्यात् । यथैकः पुरुषः पञ्च संज्ञिकः तथा सर्वं मनसा पञ्चधा सङ्कल्प्य पञ्चभिः नामभिः एव कुर्यात् । देव्यौ स्नानोत्सवबलिबेराणि च एकमूर्त्या च अर्चयेत् । परिषदां नाममन्त्रैः यथालाभमर्चनं स्यात् ।

த்ரவ்யாலாபே தோயம் (யதோக்த) பாத்ராலாபே அக்ஷதம் கூர்ச்சேன தோயம் வா பூர்வவதாசமனம் தத்யாத். "ஆபோஹிஷ்டா", இதி ஸ்நானாயாப்யுக்ஷணம் க்ருத்வா, "மித்ரஸ்ஸுவர்ண" இதி ப்லோதம், "தேஜோவத்ஸவ" இதி வஸ்த்ரம், "பூதோ பூதேஷு" இதி ஆபரணம், "ஸோமஸ்ய தனூரஸி" இதி உத்தரீயம். "அக்னிம் தூதம்" இதி உபவீதம் தத்யாத். தத்தத் த்ரவ்யம் த்யாயன் தத்ததங்கேஷு புஷ்பம் வா தத்யாத். பூர்வவத் பாத்யார்க்யாசமன புஷ்ப, கந்த, தூப, தீப ஆசமனானி பஞ்சமூர்த்தி மந்த்ரை: த்ரவ்ய நாம ஸம்யோஜ்ய "ததாமி" இதி தத்யாத். யதைக: புருஷ: பஞ்ச சம்ஞிக: ததா ஸர்வம் மனஸா பஞ்சதா ஸங்கல்ப்ய பஞ்சபி: நாமபி: ஏவ குர்யாத். தேவ்யௌ ஸ்நான உத்ஸவ பலிபேராணி ச ஏக மூர்த்யா ச அர்சயேத். பரிஷதாம் நாமமந்த்ரை: யதாலாபமர்சனம் ஸ்யாத்.

பொருள் : *பரிமள த்ரவ்யங்கள் இல்லாவிடில் வெறும் நீரையும், குறிப்பிடப்பட்டுள்ள பாத்திரங்கள் கிடைக்காவிடில் ஏதாவது ஒரு பாத்திரத்தில் அக்ஷதையையும், நீரையும் சேர்த்து கூர்ச்சத்தினால் முன்போலவே ஆசமனம் சமர்ப்பிக்கவேண்டும். "ஆபோஹிஷ்டா" எனத்தொடங்கும் மந்த்ரத்தைக் கூறி ஸ்நானத்தின் பொருட்டு கூர்ச்சத்தால் நீரைத் தெளிக்க வேண்டும். (ப்ரோக்ஷிக்க வேண்டும்). "மித்ர: ஸுவர்ண" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி பெருமாளுக்கு ப்லோதம் சமர்ப்பிக்கவேண்டும். (பெருமாளைத் துடைக்க வேண்டும்.) "தேஜோவத்ஸவ" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி பெருமாளுக்கு வஸ்த்ரம் சமர்ப்பிக்க வேண்டும் 'பூதோ பூதேஷு" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி பெருமாளுக்கு ஆபரணங்கள் சமர்ப்பிக்க வேண்டும். 'ஸோமஸ்ய தனூரஸி' எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி உத்தரீயம் (மேல்வஸ்த்ரம்) சமர்ப்பிக்க வேண்டும். "அக்னிம்தூதம்" எனத் தொடங்கும் மந்த்ரத்தைக் கூறி யக்ஞோபவீதம் (முப்புரிநூல்) சமர்ப்பிக்க வேண்டும் ஆபரணாத்யலங்கார வஸ்துக்கள் இல்லையெனில் அந்தந்த த்ரவ்யங்களை நினைத்து அவ்வவ்விடங்களில் புஷ்பமாவது சேர்க்க வேண்டும். முன்போலவே பாத்ய, அர்க்ய, ஆசமனம், புஷ்பம், சந்தனம், தூபம், தீபம் மறுபடி ஆசமனாதிகளையும் பஞ்சமூர்த்தி மந்த்ரங்களுடன் யக்ஞோபவீதம் சமர்ப்பயாமி என்ற முறையில் சமர்ப்பிக்கவேண்டும். ஒரே ஒரு மூர்த்தி உள்ள தேவாலயங்களில் ஒரு மூர்த்தியையே ஐந்து மூர்த்தியாக பாவித்து முன் சொன்னவற்றைச் செய்ய வேண்டும். ஸ்நான, உத்ஸவ, பலி பேரங்களை ஒரே*

மூர்த்தியாக நினைத்து அர்ச்சித்தல் வேண்டும். இதேமுறைதான் ஸ்ரீதேவி, பூதேவிகளுக்கும், பரிவார தேவதைகளை யதா சௌகர்யம் பூஜிக்க வேண்டும்.

"अथावनीदं" इति प्रोक्ष्य, प्रमुखे मण्डलमुपलिप्य, हविःपात्रं सङ्गृह्य, अधिदेवमादित्यमभ्यर्च्य, संशोध्य "देवस्यत्वा", इति घृतेनाऽभिघार्य, गायत्रीं वैष्णवीं जपन् स्थाल्यां चतुर्भागं हित्वा, त्रिभागं हविःपात्रे प्रक्षिप्य, मण्डले निधाय, तस्मिन् हविषि, सुगन्धमुत्पूतं गव्य घृत "देवस्य" इति आघ्राय "अहमस्मि" इत्यभिमृश्य "तदस्यप्रियं", "सुभूस्स्वयंभूः" इति हविर्निवेदयेत् । देवीभ्यां स्नापनोत्सव बलिबेरेभ्यः निवेदयेत् ।

"அதாவனீதம்" இதி ப்ரோக்ஷ்ய, ப்ரமுகே மண்டலமுபலிப்ய, ஹவி: பாத்ரம் ஸங்க்ருஹ்ய, அதிதேவமாதித்யமப்யர்ச்ய, ஸம்சோத்ய, "தேவஸ்யத்வா" இதி க்ருதேனாऽபிகார்ய, காயத்ரீம் வைஷ்ணவீம் ஜபன் ஸ்தால்யாம் சதுர் பாகம் ஹித்வா, த்ரிபாகம் ஹவி: பாத்ரே ப்ரக்ஷிப்ய, மண்டலே நிதாய தஸ்மின் ஹவிஷி ஸுகந்தமுத்பூதம் கவ்ய க்ருதம் "தேவஸ்ய" இதி ஆக்ராவ்ய "அஹமஸ்மி" இத்யபிம்ருச்ய "ததஸ்ய ப்ரியம்", "ஸுபூஸ்வயபூ:" இதி ஹவிர் நிவேதயேத். தேவீப்யாம் ஸ்நாபனோத்ஸவ பலிபேரேப்ய: நிவேதயேத்.

பொருள்: "அதாவனீதம்" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி ப்ரோக்ஷிக்க வேண்டும். பகவானுக்கு முன்பாக ஸ்தல சுத்தி செய்து (மடைப் பள்ளிக்குச் சென்று) ஹவிர்நிவேதனப் பாத்திரத்தை சுத்தம் செய்து அதன் அதிதேவதையான சூர்யனை ஆவாஹனம் செய்து, "தேவஸ்யத்வா" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி நெய்யைவிட்டு சுத்தம் செய்து, பிறகு காயத்ரியை ஜபித்து சமைத்த பாத்திரத்தில் உள்ள அன்னத்தை நான்கு பாக மாகப் பகிர்ந்து மூன்று பாகத்தை ஹவிர் நிவேதனப் பாத்திரத்தில் சேர்த்து எடுத்துவந்து எம்பெருமானுக்கு முன்னிலையில் சுத்தி செய்யப்பட்ட இடத்தில் வைத்து அந்த அன்னத்தில் நல்ல வாசனையுள்ள பசு நெய்யை "தேவஸ்ய" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி சேர்த்து, "அஹமஸ்மி" என்று தொடங்கும் அன்ன சூக்தத்தைச் சொல்லி அன்னத்தைத் தொட்டு, "ததஸ்ய ப்ரியம்", "ஸுபூஸ்வயம்பூ:" என்பதாகத் தொடங்கும் மந்த்ரங்களைக் கூறி ஹவிர்நிவேதனம் செய்ய வேண்டும். பிறகு ஸ்ரீதேவி, பூதேவிக்கும், ஸ்நபன, உத்ஸவ, பலி பேரங்களுக்கும் ஹவிர் நிவேதனம் செய்யவேண்டும்.

ब्रह्मसुत्कुटिकासनं वा आसीनः अग्निकुण्डे चुल्यां वा, अग्निं परिषिच्य, देवेशाय साज्यचरुं "अतो देवाद्यैः" मूर्तिमन्त्रैश्च जुहुयात् । देव्यादि तदालयगतपरिषद्देवेभ्यस्त्रिकालं जुहुयात् । उत्तमे प्रातर्मध्याह्नयोः देवेशाय, देवीभ्यां मुनिभ्यां ब्रह्मेशानाभ्यां, मध्यमे च एतेभ्यो मध्याह्न एव अधमे जुहुयात् । पुनश्चाग्निं परिषिच्य अशक्तः कुण्डादर्नि समिध्यारोप्य लौकिकाग्नौ निधाय जुहुयात् ।

ப்ரம்மமுத்குடிகாசனம் வா, ஆஸீன:, அக்னி குண்டே சுல்யாம் வா, அக்னிம் பரிஷிச்ய தேவேசாய ஸாஜ்ய சரும் "அதோதேவா த்யை:" மூர்த்தி மந்த்ரைச்ச ஜுஹுயாத். தேவ்யாதி ந்தாலயகத பரிஷத்தேவேப்ய: த்ரிகாலம் ஜுஹுயாத். உத்தமே ப்ராதர்மத்யாஹ்னயோ: தேவேசாய, தேவீப்யாம், முனிப்யாம், ப்ரம்மேசானாப்யாம் மத்யமே ச ஏதேப்ய: மத்யான்ன ஏவ அதமே ஜுஹுயாத், புனச்சாக்னிம் பரிஷிச்ய அசக்த: குண்டாதக்னிம் ஸமித்யாரோப்ய லௌகீகாக்னௌ நிதாய ஜுஹுயாத்.

பொருள் : ஆஸநத்திலோ ப்ரம்மமுத்குடிகாஸனத்திலோ (அர்ச்சகன்) அமர்ந்து அக்னி குண்டத்தில் அக்னியை ஜ்வலிக்கச் செய்து, பரிசேஷணம் செய்ய வேண்டும். பெருமாளைக் குறித்து நெய்யுடன் சேர்ந்த சருவை (ஹவிஸை) "அதோதேவாதி" மந்த்ரங்களைக் கூறியும், மூர்த்தி மந்த்ரங்களைக் கூறியும் ஹோமம் செய்ய வேண்டும். அந்த ஆலயத்திலுள்ள ஸ்ரீதேவி, பூதேவிகளுக்கும், பரிவார தேவதைகளுக்கும் மூன்று வேளையும் ஹோமம் செய்ய வேண்டும் இதில் பெருமாளுக்கும், ஸ்ரீதேவி, பூதேவி மற்றும் பரிவார தேவதைகளுக்கும் காலையும், மதியமும் ஹோமம் செய்வது உத்தம பக்ஷம். காலையில் மட்டும் ஹோமம் செய்வது மத்யம பக்ஷம். மதிய நேரத்தில் மட்டும் ஹோமம் செய்வது அதம பக்ஷமாகும். மறுபடியும் அக்னியை பரிசேஷனம் செய்து முடிக்க வேண்டும். இவை வைதீக அக்னியில் செய்ய வேண்டும். முடியவில்லையெனில் ஒரு முறை ஹோமம் செய்து அதிலிருந்து (வைதீக அக்னியில் ஹோமம் செய்த குண்டத்திலிருந்து) சமித்தை எடுத்து வைத்திருந்து அதை லௌகீகாக்னியில் சேர்த்து ஹோமம் செய்ய வேண்டும்.

शिष्यो नम्र देहः तत्तद्देशे मणिकादिद्वारपालेभ्यः श्रीभूताद्यनपायिभ्यः दिग्देवताभ्यः विमानपालेभ्यः महीभूतान्तं प्रणवादि नमोऽन्तेन तत्तन्नाम्ना पूर्वमुदकं पुष्पं बलिमुदकं च दद्यात् । तस्य दक्षिणतः भूतयक्षपिशाचनागेभ्यः बलिशेषं दद्यात् ।

ஸிஷ்யோ நம்ரதேஹ: தத்தத்தேசே மணிகாதித்வாரபாலேப்ய: ஸ்ரீபூதாத்யனபாயிப்ய: திக்தேவதாப்ய:, விமானபாலேப்ய: மஹீபூதாந்தம் ப்ரணவாதி நமோऽந்தேன தத்தந்நாம்னா பூர்வமுதகம் புஷ்பம் பலிமுதகம் ச தத்யாத். தஸ்ய தக்ஷிணத: பூதயக்ஷபிசாசநாகேப்ய: பலிசேஷம் தத்யாத்.

பொருள் : சிஷ்யன் வணங்கிய தேஹத்துடன், அந்தந்த இடத்தில் மணிகன் முதலான த்வார தேவதைகளான ஸ்ரீபூதாதிகளின் பொருட்டும், திக்தேவதைகளின் பொருட்டும், விமான தேவதைகளின் பொருட்டும், பலிபீடம் வரையுள்ள அனைத்து தேவதைகளையும், அந்தந்த இடத்திற்குரிய தேவதையின் பெயருக்கு முன்பு ப்ரணவத்தையும் முடிவில் "நம:" என்ற சப்தத்தையும் கூறி (உதாரணமாக: ஓம் மணிகாய நம:) முதலில் ஜலம் சேர்த்துவிட்டுப்

புஷ்பம். பலி அன்னம், ஜலம் சேர்க்கவேண்டும். பலி பீடத்திற்கு பலி சேர்த்து முடிந்த பிறகு மீதம் உள்ளதை பலிபீடத்திற்குத் தென்புறம் உள்ள பூதயக்ஷ பிசாச நாகாதிகளுக்குச் சேர்த்து விடவேண்டும்.

देवेशाय "इदं विष्णुः" इति स्वादुशीतलं वारि पानीयं दत्वा, निवेदितमपनीय मण्डलं संमृज्य, तथैव आचमनं, "विचक्रम" इति मुखवासं दत्वा विधिना बलिमाराध्य, बलिबेरयुतमालय प्रदक्षिणं कारयेत् । विष्णुसूक्तेन मस्तिष्कं संपुटं प्रह्वाङ्गं, पञ्चाङ्गं, दण्डाङ्गं इति पञ्चप्रणामान् कुर्यात् ।

தேவேசாய "இதம் விஷ்ணு:" இதி ஸ்வாதுசீதலம் வாரி பானீயம் தத்வா, நிவேதிதமபனீய மண்டலம் ஸம்ருஜ்ய, ததைவ ஆசமனம், "விசக்ரம" இதி முகவாஸம் தத்வா விதினா பலிமாராத்ய, பலிபேரயுதமாலயம் ப்ரதக்ஷிணம் காரயேத் விஷ்ணுஸூக்தேன மஸ்திஷ்கம், ஸம்புடம், ப்ரஹ்வாங்கம், பஞ்சாங்கம், தண்டாங்கம் இதி பஞ்ச ப்ரணாமான் குர்யாத்.

பொருள்: பகவானுக்கு "இதம் விஷ்ணு:" என்ற மந்த்ரத்தைச் சொல்லி குளிர்ந்த நீர் பருகசமர்ப்பிக்கவேண்டும். நிவேதனம் செய்யப்பட்ட தளிகைகளை வேறு இடத்தில் வைத்துவிட்டு, முன்பு தளிகை நிவேதனத்திற்காக வைக்கப்பட்டிருந்த இடத்தை சுத்தம் செய்யவேண்டும். முன்போலவே ஆசமனம் சமர்ப்பிக்கவேண்டும். "விசக்ரம" எனத் தொடங்கும் மந்த்ரத்தைக் கூறி வெற்றிலை பாக்கு (தாம்பூலம்) சமர்ப்பித்துவிட்டு, முறைப்படி பலி பேரத்தை ஆராதித்து, பலிபேரத்துடன் அர்ச்சகன் கோயிலை ப்ரதக்ஷிணமாக வரவேண்டும். விஷ்ணுஸூக்தத்தைச் சொல்லி, மஸ்திஷ்கம், ஸம்புடம், ப்ரஹ்வாங்கம், பஞ்சாங்கம், தண்டாங்கம் போன்ற ப்ரணாமங்களில் ஏதேனும் ஒரு முறைப்படி ஐந்துமுறை நமஸ்கரிக்கவேண்டும்.

मस्तकेऽञ्जलौ न्यस्ते स मस्तिष्कः । हृदयेञ्जलिपुटं न्यसेत् स संपुटः । पाणी व्यत्यस्य हृदये न्यस्याऽऽनतगात्रो भवेत् स प्रह्वाङ्गः । पादाङ्गुलिभ्यां जानुभ्यां वाऽऽसीनः साञ्जलिर्भूमौ ललाटं निदध्यात् स पञ्चाङ्गः । पादौ हस्तौ प्रसार्य साञ्जलिर्भूत्वा अधोमुखो दण्डवच्छयितः स दण्डाङ्गः प्रणामः । रत्नं सुवर्णं मुखवासं वा दक्षिणां दद्यात् । पुरुषसूक्तेन एकाक्षरादिना च संस्तूय अष्टाक्षरेण पुष्पाञ्जलिं ददाति । "श्रियै जात" इति कर्पूरनीराजनं कारयेत् । "सूर्यस्त्वेति" कवाटौ बन्धयति ।

மஸ்தகேऽஞ்சலௌ ந்யஸ்தே ஸ மஸ்திஷ்க:. ஹ்ருதயேஞ்சலி புடம் ந்யஸேத் ஸ ஸம்புட:. பாணீ்வ்யத்யஸ்ய ஹ்ருதயே ந்யஸ்யாऽநதகாத்ரோ பவேத் ஸ ப்ரஹ்வாங்க:. பாதாங்குலிப்யாம் வாऽऽஸீன: ஸ அஞ்சலி:. பூமௌ

லலாடம் நிதத்யாத் ஸ பஞ்சாங்க:. பாதெள ஹஸ்தௌ ப்ரஸார்ய ஸாஞ்சலிர் பூத்வா அதோமுகோ தண்டவச்சயித: ஸ தண்டாங்க: ப்ரணாம:. ரத்னம், ஸுவர்ணம் முகவாஸம் வா தக்ஷிணாம் தத்யாத். புருஷ ஸூக்தேன ஏகாக்ஷ ராதினா ச ஸம்ஸ்தூய அஷ்டாக்ஷரேண புஷ்பாஞ்சலிம் ததாதி. "ச்ரியைஜாத" இதி கர்பூர நீராஜனம் காரயேத் "ஸூர்யஸ்த்வேதி" கவாடௌ பந்தயதி.

பொருள் : முன்பத்தியின் இறுதியில் பெருமாளை வணங்கும் விதம் மட்டும் சொல்லப்பட்டது. அவற்றிற்கு இங்கே விளக்கம் தரப்படுகிறது. தலைக்கு நேராக இருகைகளையும் கூப்பி வணங்குவது "மஸ்திஷ்கம்", எனப் படும். கைகளைக் கூப்பி ஹ்ருதயத்திற்கு நேராக வைத்து நமஸ்கரிப்பது "ஸம்புடம்" எனப்படும். கைகளைக் கட்டிக்கொண்டு முகமானது ஹ்ருதயத் தைப்பார்க்குமாறு குனிந்து வணங்குவது "ப்ரஹ்வாங்க:" எனப்படும். பெண்கள் வணங்குவது போல நமஸ்கரிப்பது "பஞ்சாங்கம்" எனப்படும். கை கால்களை நன்கு நீட்டி தலையை உள்முகமாக வைத்துக்கொண்டு தண்டத்தை (குச்சியை)ப்போன்று விழுந்து வணங்குதல் தண்டாங்கம் எனப்படும். பிறகு பெருமாளுக்கு தக்ஷிணா தாம்பூலம் சமர்ப்பிக்க வேண்டும். புருஷ ஸூக்தம் அல்லது ஏகாக்ஷர ஸூக்தம் இவற்றில் ஏதாவது ஒன்றினைச் சொல்லி, பெருமாளுக்கு அஷ்டாக்ஷரத்தையும் சொல்லி புஷ்பாஞ்சலி செய்யவேண்டும். "ச்ரியை ஜாத" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி கற்பூர நீராஜனம் செய்யவேண்டும். "ஸூர்யஸ்த்வா" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி கதவுகளைப் பூட்ட வேண்டும்.

मध्याह्ने, सायाह्ने च पूर्ववदुद्घाटयति । द्वारार्चित पुष्पाणि व्यपोह्याऽभ्युक्ष्य, ध्रुवस्य पाद पीठेन्यस्तानि पुष्पाण्युद्धृत्य, उपरि पूर्ववत् पुष्पन्यासं कुर्यात् । निशान्ते तानि निर्माल्यानि भवन्ति । तथैव धात्रादि द्वारदेवांश्चाभ्यर्च्य,कौतुकादि बिम्बे अर्चितानि पुष्पाण्यादाय तत्पीठपार्श्वे निधाय आसनाद्यैरर्चयेत् । उत्तमे पाद्याद्यैरुपचारैरर्चयेत् । मध्यमे रात्रौ स्नानाद्यै-रुपवीतान्तैः विना अन्यैः । अधमे पाद्यार्घ्याचमनान्तैः हविषि लब्धे पाद्यादिहविरन्तैः अधयामे, पाद्यादिदीपान्ते हविरन्तैरित्येके । अर्धयामे पुष्पन्यासहोमबलिदानबल्युद्धरणानि न कुर्वीत ।

மத்யாஹ்னே, ஸாயாஹ்னே ச பூர்வவதுத்காடயதி. த்வாரார்ச்சித புஷ்பாண்யபோஹ்யாப்யுக்ஷ்ய த்ருவஸ்ய பாத பீடே ந்யஸ்தானி புஷ்பாண்யனு-த்ருத்ய உபரி பூர்வவத் புஷ்பந்யாஸம் குர்யாத். நிசாந்தே தானி நிர்மால்யானி பவந்தி. ததைவ தாத்ராதி த்வாரதேவாச்சாப்யர்ச்ய, கௌதுகாதி பிம்பே அர்ச்சிதானி புஷ்பாண்யாதாய தத்பீடபார்ச்வே நிதாய, ஆஸனாத்யை: அர்ச்சயேத், உத்தமே பாத்யாத்யைருபசாரைரர்ச்சயேத் மத்யமே ராத்ரௌ ஸ்நாநாத்யை: உபவீதாந்தை: வினா அந்யை: அதமே பாத்யார்க்ய

ஆசமனாந்தை: ஹவிஷி லப்தே பாத்யாதி ஹவிரந்தை: அர்த்தயாமே பாத்யாதி தீபாந்தே ஹவிரந்தைரித்யேகே அர்த்தயாமே புஷ்பந்யாஸ ஹோம பலிதான பல்யுத்தரணானி ந குர்வீத.

பொருள்: பெருமாளுக்கு பூஜையானது காலையிலும், மாலையிலும் விடுபட்டுவிட்டால், உச்சி கால திருவாராதனத்தில் இரு மடங்கு தளிகை செய்து நிவேதனம் செய்ய வேண்டும். அது போன்றே வைஷ்ணவம், புருஷ ஸூக்தம், விஷ்ணு ஸூக்தம் ஆகியவற்றைக் கூறி ஹோமம் செய்ய வேண்டும். காலை பூஜையும், (மதிய) உச்சிகால பூஜையும் விடுபட்டுவிட்டால் மாலையில் செய்யும் பூஜையில் மூன்று மடங்கு தளிகை சமர்ப்பிக்க வேண்டும்.

ஒரு நாள் முழுவதும் பூஜையானது விடுபட்டு விட்டால், மூன்று காலத்திற்கும் உரிய அளவு தளிகை செய்து நிவேதனம் செய்வதோடு, தக்ஷிணாக்னியில் விதிப்படி அக்னி ப்ரதிஷ்டை செய்து, பெருமாளை வணங்கி, நெய்யினால் வைஷ்ணவ மந்த்ரத்தை சொல்லி இருபத்தைந்து முறை ஆஹுதியைச் செய்து, பிறகு புருஷ, விஷ்ணு ஸூக்தங்களைக்கூறி ஹோமம் செய்யவேண்டும். பின்னர் ப்ராம்மணர்களுக்கு சாப்பாடு போட்டு தக்ஷிணையும் கொடுக்கவேண்டும். இது ஒருநாள் பூஜை விடுபட்டதற்கு ப்ராயச்சித்தமாகும். இம்மாதிரி இருநாட்கள் விடுபட்டால் இதைப்போன்று இருமடங்கு ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிக்கவேண்டும். இப்படியே 12 நாட்கள் வரையில் அதிகரித்துக் கொண்டே போகும்.

द्वादशाहे व्यतीते तु निधायाग्निं तथैव च ।
आघारं विधिवद्धुत्वा वैष्णवं च शतं यजेत् ॥

तथा पुरुषसूक्तं च विष्णुसूक्तं शतं यजेत् ।
चत्वारिंशद्भिरष्टाभिः कलशैः स्नापयेद्विभुम् ॥

प्रणम्य देवदेवं तमर्चयित्वा यथा विधि ।
महाहविः प्रभूतं वा भक्त्या सम्यङ्निवेदयेत् ॥

आचार्याय पशून् दत्वा शक्त्या विप्रांश्च भोजयेत् ।

த்வாதசாஹே வ்யதீதேது நிதாயாக்னிம் ததைவ ச ।
ஆகாரம் விதிவத்துத்வா வைஷ்ணவம் ச சதம் யஜேத் ॥

ததா புருஷ ஸூக்தம் ச விஷ்ணு ஸூக்தம் சதம் யஜேத் ।
சத்வாரிம்சத்பிரஷ்டாபி: கலசை: ஸ்நாபயேத் விபும் ॥

ப்ரணம்ய தேவதேவம் தமர்ச்சயித்வா யதாவிதி ।
மஹா ஹவி: ப்ரபூதம்வா பக்த்யா ஸம்யங் நிவேதயேத் ॥

ஆசார்யாய பசூன் தத்வா சக்த்யா விப்ராம்ச்ச போஜயேத் ।

பொருள்: பன்னிரண்டு நாட்களுக்கு மேல் விடுபட்டால் ஒவ்வொரு நாளாக சேர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் விதிப்படி முன்போலவே அக்னி ப்ரதிஷ்டை செய்து, வைஷ்ணவத்தை நூறுமுறை சொல்லி ஹோமம் செய்ய வேண்டும். அது போன்றே புருஷ, விஷ்ணு ஸூக்தங்களையும் நூறு முறை சொல்லி ஹோமம் செய்யவேண்டும். பிறகு 48 கலசங்கள் வைத்து பெருமாளுக்கு ஸ்நபனம் (திருமஞ்சனம்) செய்விக்கவேண்டும். பெருமாளை

வணங்கி விதிப்படி பூஜை செய்யவேண்டும். அதிக அளவு ப்ரசாதம் ஹவிர் நிவேதனம் செய்யவேண்டும். ஆசார்யனுக்கு பசு தானம் கொடுத்து, எவ்வளவு முடியுமோ அவ்வளவு ப்ராம்மணர்களுக்கு சாப்பாடு போட வேண்டும்.

मासहीनं यदि भवेत् प्रायश्चित्तं सुहूयते ॥

प्राच्यामाहवनीयं च दक्षिणाग्निं च दक्षिणे ।
गार्हपत्यं प्रतीच्यां तु आवसथ्यं तथोत्तरे ॥

पूर्वोक्तेन क्रमेणैव कुण्डं कृत्वा सलक्षणम् ।
आघारं पूर्ववत्कृत्वा परिषिच्य च पावकम् ॥

प्राच्यां पुरुषसूक्तं च विष्णुसूक्तं च दक्षिणे ।
वैष्णवं गार्हपत्याग्नौ मूर्तिहोमं तथोत्तरे ॥

देवेशं मनसा ध्यात्वा प्रत्येकं चैकविंशतिः ।
देवीभ्यां च मुनिभ्यां च वैघ्नं गारुड संयुतम् ॥

तत्तद्धोमे सुहोतव्यं महाव्याहृति संयुतम् ।
शताष्ट कलशैर्देवं स्नापयित्वा विधानतः ॥

पुण्याहं वाचयित्वा तु पश्चाद्विप्रान्सुपूजयेत् ।
गणयित्वाथवा यावत्कालं शून्यगतं भवेत् ॥

तावच्चैवार्चनाद्रव्यं देवेशस्य निवेदयेत् ।
एवं मासे प्रकुर्वीत द्विमासे द्विगुणं भवेत् ॥

एवं तद्वर्धयित्वा तु यावत्संवत्सरान्तकम् ।

மாஸஹீனம் யதிபவேத் ப்ராயச்சித்தம் ஸுஹூயதே ॥

ப்ராச்யாமாஹவனீயம் ச தக்ஷிணாக்னிம் ச தக்ஷிணே ।
கார்ஹபத்யம் ப்ரதீச்யாம் து ஆவஸ்ஸத்யம் ததோத்தரே ॥

பூர்வோக்தேன க்ரமேணைவ குண்டம் க்ருத்வா ஸலக்ஷணம் ।
ஆகாரம் பூர்வவத் க்ருத்வா பரிஷிச்ய ச பாவகம் ॥

ப்ராச்யாம் புருஷ ஸூக்தம் ச விஷ்ணு ஸூக்தம் ச தக்ஷிணே ।
வைஷ்ணவம் கார்ஹ பத்யாக்னௌ மூர்த்தி ஹோமம் ததோத்தரே ।

தேவேசம் மனஸா த்யாத்வா ப்ரத்யேகம் சைகவிம்சதி: ।
தேவீப்யாம் ச முனிப்யாம் ச வைக்னம் காருட ஸம்யுதம் ॥

தத்தத்தோமே ஸ்வாஹா தவ்யம் மஹாவ்யாஹ்ருதி ஸம்யுதம் ।
சதாஷ்ட கலசைர்தேவம் ஸ்நாபயித்வா விதானத: ॥

புண்யாஹம் வாசயித்வா து பச்சாத்விப்ரான்ஸுபூஜயேத் ।
கணயித்வா தவா யாவத்காலம் சூன்யகதம் பவேத் ।

தாவச்சைவார்ச்சனா த்ரவ்யம் தேவேசஸ்ய நிவேதயேத் ।
ஏவம் மாஸே ப்ரகுர்வீத த்விமாஸே த்வி குணம் பவேத் ॥

ஏவம் தத் வர்த்தயித்வா து யாவத் ஸம்வத்ஸராந்தகம் ।

பொருள்: ஒரு மாதம் பூஜையானது விடுபட்டால், கிழக்குப் புறத்தில் ஆஹவனீயாக்னியையும், தெற்கில் தக்ஷிணாக்னியையும், மேற்கில் கார்ஹ-பத்யாக்னியையும், வடக்கில் ஆவஸ்த்யாக்னியையும் லக்ஷணங்களுடன் கூடிய குண்டத்தில் ஆவாஹனம் செய்து முன்போல அக்னி ப்ரதிஷ்டை செய்து, அக்னியை பரிசேஷணம் செய்யவேண்டும். கிழக்கு திசையில் உள்ள ஹோம குண்டத்தில் புருஷ ஸூக்த ஹோமமும், தெற்கு திசையில் உள்ள ஹோம குண்டத்தில் விஷ்ணு ஸூக்த ஹோமமும், மேற்கு திசையில் உள்ள ஹோம குண்டத்தில் வைஷ்ணவ ஹோமமும், வடக்கு திசையில் உள்ள ஹோம குண்டத்தில் மூர்த்தி ஹோமமும் செய்யவேண்டும். பெருமாளை மனதில் த்யானித்து, ஒவ்வொரு மந்த்ரத்தையும் 21 முறை சொல்லியும், ஸ்ரீதேவி, பூமிதேவிக்கும், முனிகள், விநாயகர் ஆகிய தேவதைகளுக்கும் (பரிவாரங்களுக்கும்) மஹாவ்யாஹ்ருதியுடன் சேர்த்து நன்கு ஹோமம் செய்ய வேண்டும். பெருமாளுக்கு 108 கலசங்கள் வைத்து ஸ்நபனம் செய்விக்க வேண்டும்.

புண்யாஹவாசனம் செய்து, பிறகு ப்ராம்மணர்களைப் பூஜிக்க வேண்டும். மேலும், எவ்வளவு நாள் விடுபட்டுள்ளது என கணக்கிட்டு, அவ்வளவு நாட்களுக்கும் உரிய ப்ரசாதம் செய்து சமர்ப்பிக்கவேண்டும். அல்லது எவ்வளவு ப்ரசாதம் அதிகப்படியாக சமர்ப்பிக்க இயலுமோ அவ்வளவு ப்ரசாதம் செய்து பெருமாளுக்கு நிவேதனம் செய்யவேண்டும்.

ஒரு மாதத்திற்கு விடுபட்டால் மேற்குறிப்பிட்டவாறு (பரிஹாரம்) ப்ராயச்சித்தம் செய்யவேண்டும். இரண்டு மாதம் விடுபட்டால் மேற்கூறிய

வற்றை இரு மடங்காக அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்வாறு 12 மாதங்கள் விடுபட்டுவிட்டால் 12 மடங்கு கணக்கிட்டு மேற்கூறியபடி செய்ய வேண்டும்.

तथा संवत्सरेऽतीते साहस्रैरष्टसंयुतैः ॥

देवं शताष्टकैर्वाथ कलशैः स्नापयेद्बुधः ।
तदर्थं देवमुद्दिश्य दानं सम्यक्समाचरेत् ॥

सुवर्णदानं गोदानं भूमिदानं च शक्तितः ।
दत्वैवाचार्य पूर्वेभ्यो वेदविद्भ्यः स्वशक्तितः ॥

अब्जाग्निं साधयित्वा तु महाशान्तिस्सुहूयताम् ।
पद्मान् सहस्रं संहृत्य कपिलाघृत संयुतम् ॥

प्रत्येकं जुहुयात्तत्र गायत्रीं वैष्णवीं वदन् ।
पूर्वोक्तेन विधानेन प्रतिष्ठां पुनराचरेत् ॥

एवं देवार्चनेहीने प्रायश्चित्तं विधीयते ।
अन्येषामपि देवानामिदं सामान्यमुच्यते ॥

॥ इति श्रीवैखानसे अत्रिप्रोक्ते समूर्तार्चनाधिकरणे नित्यार्चनप्रायश्चित्तविधिर्नाम सप्ततितमोऽध्यायः ॥

ததா ஸம்வத்ஸரேऽதீதே ஸாஹஸ்ரைரஷ்டஸம்யுதை: ॥

தேவம் சதாஷ்டகைர்வாத கலசை: ஸ்நாபயேத் புத: ।
ததர்த்தம் தேவமுத்திச்ய தானம் ஸம்யக் சமாசரேத் ॥

ஸுவர்ண தானம் கோதானம் பூமிதானம் ச சக்தித: ।
தத்வைவாசார்ய பூர்வேப்யோ வேதவித்ப்ய: ஸ்வ சக்தித: ॥

அப்ஜாக்னிம் ஸாதயித்வா து மஹாசாந்திஸ்ஸுஹூயதாம் ।
பத்மான் ஸஹஸ்ரம் ஸம்ஹ்ருத்ய கபிலாக்ருத ஸம்யுதம் ॥

ப்ரத்யேகம் ஜுஹுயாத்தத்ர காயத்ரீம் வைஷ்ணவீம்வதன் ।
பூர்வோக்தேன விதானேன ப்ரதிஷ்டாம் புனராசரேத் ॥

ஏவம் தேவார்ச்சனே ஹீனே ப்ராயச்சித்தம் விதீயதே ।
அன்யேஷாமபி தேவானாமிதம் ஸாமான்யமுச்யதே ॥

இதி ஸ்ரீவைகானஸே அத்ரி ப்ரோக்தே ஸமூர்த்தார்ச்சனாதிகரணே
நித்யார்ச்சன ப்ராயச்சித்தவிதிர்நாம ஸப்ததிமோऽத்யாய:.

பொருள் : ஒரு வருடத்திற்கு மேல் பூஜையானது விடுபட்டால், 1008 கலசங்கள் வைத்து பெருமாளுக்கு ஸ்நபனம் செய்விக்க வேண்டும். அதில் பாதியளவு அந்தந்த பெருமாளைப் பொறுத்து தானம் செய்ய வேண்டும்.

*பௌண்டரீகாக்னிகுண்டதில் அக்னி ப்ரதிஷ்டை செய்து, ஆயிரம் தாமரை புஷ்பங்களை பசுநெய்யுடன் சேர்த்து (மஹா சாந்தியாக) ஒவ்வொரு ஆஹுதிக்கும் விஷ்ணு காயத்ரியைச் சொல்லி ஹோமம் செய்ய வேண்டும். மேற்கூறிய அனைத்தையும் செய்த பிறகு மறுபடியும் ப்ரதிஷ்டை செய்ய வேண்டும்.

பெருமாளுக்கு திருவாராதனமானது விடுபட்டால் மேலே கூறியபடி ப்ராயச்சித்தம் விதிக்கப்பட்டுள்ளது. மற்ற தேவதைகளுக்கும் இதுவே சாதாரணமாக சொல்லப்பட்டது.

இவ்வாறு ஸ்ரீவைகானஸத்தில் அத்ரி மஹரிஷியால் சொல்லப்பட்ட
ஸமூர்த்தார்ச்சனாதிகரணத்தில் எழுபதாவது அத்யாயத்தில்
நித்யார்ச்சன ப்ராயச்சித்த விதி முற்றும்.

* பௌண்டரீகாக்னி குண்டம் — தாமரை மலர் போன்று அமைக்கப் பெற்ற ஹோம குண்டம்.

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
18—4—94.

இ. வேங்கடாசலம், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

காத்தவராயன் சுவாமி பேரில் கும்மிப் பாடல்

புலவர் **ச. திலகர்,** பி. லிட்.,
தமிழ்த்துறை,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

முன்னுரை:

மதுரைவீரன் கதை, அல்லியரசாணி அம்மானை, நல்லதங்காள் கதை அபிமன்னன் சுந்தரி மாலை, பொன்னர் சங்கர் கதை, முத்துப்பட்டன் கதை முதலிய கதைப்பாடல் இலக்கியங்கள் வாய்மொழி இலக்கிய இயல்புகளைப் பெற்றுப் புராணக்கதை அடிப்படையிலும், சமூகக்கதை அடிப்படையிலும் உருவாகி மக்களிடம் பெருவழக்குப்பெற்று வழங்கி வருகின்றன. இக்கதைப் பாடல் நூல்கள் அம்மானை வடிவ அமைப்பிலோ, கும்மி வடிவ அமைப்பிலோ அமைந்திருக்கும். இவ்வகைக் கதைப்பாடல்களில் ஒன்றான காத்தவராயன் கதை, கும்மி வடிவ அமைப்பில் அமைந்ததான 'காத்தவராயன் கும்மி' என்னும் சிறு நூலே இங்குச் சுவடியிலிருந்து பதிப்பிக்கப்பெறுகின்றது.

காத்தவராயன் கதை கூறும் நூல்கள்:

1. காத்தவராயன் கதைப்பாடல)
2. காத்தவராய சுவாமி கதை

ஆகிய இரண்டு நூல்களும் காத்தவராயன் கதை கூறும் அச்சான நூல்கள் ஆகும். காத்தவராயன் நாடகம் என்னும் நூல் சென்னை அரசாங்க நூல் நிலையத்தில் கையெழுத்துப்படியாக உள்ளது என்று ந. சி. கந்தையா பிள்ளை யின் தமிழ் இலக்கிய அகராதியால் அறிய முடிகின்றது. (வாழ்வியல் களஞ்சியம் பா-

தொகுதி — 7, தமிழ்ப் பல்கலைக்கழகம்) காத்தவராயன் உடுக்கைப் பாட்டு, காத்தவராயன் மோடி நாடகம் முதலிய நாடகங்கள் அச்சில் வெளி வராதவையாகவும், மாரியம்மன் திருவிழாவின்போது மக்களின் முன்னிலையில் கதைப்பாடகர் பாடுவனவாகவும் அறியப்பெறுகின்றன. காத்தவராயன் கதை, பொதுமக்களிடையே நாடக வாயிலாகவும், திரைப்பட வாயிலாகவும் பரவி, இன்றுவரை செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றது.

காத்தவராயன் கதைப்பாடல் பதிப்பும் இந்தக் காத்தவராயன் கும்மிப் பதிப்பும்:

நாட்டுப்புற இயல் ஆய்வறிஞரான திரு. வானமாமலை, காத்தவராயன் கதைப்பாடல் என்னும் நூலினை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் மூலம் அரிய குறிப்புகள் அமைந்த பதிப்புரையோடு வெளியிட்டிருக்கின்றார். புராணப் பாத்திரமாகக் காத்தவராயன் கருதப்பட்டாலும் இக்கதை பெரிதும் சமூகவியல் கூறுகளை உட்கொண்டதாக அமைந்திருப்பதை அவர் சுட்டிக் காட்டுவது நோக்கத்தக்கதாகும்.

அப்பகுதி ;

'இக்கதையில் கருப்பொருள் சமூகவியல் முக்கியத்துவம் வாய்ந்தது. அமைப்பு முறையை மீறிய ஒரு திருமணமும் அதன் விளைவுகளுமே இப் பாடலின் பொருள்' என்பதே அக்கருத்து.

சரசுவதி மகால் தமிழ்த் துறையில் இடம்பெற்றுள்ள காத்தவராயன் சுவாமி பேரில் கும்மி என்னும் சிறு சுவடியினை அடிப்படையாகக்கொண்டு இந் நூல் பதிப்பிக்கப்படுகின்றது. இச்சுவடி தமிழ்த்துறைச் சுவடிப் பதிவெண் 1581ஐக் கொண்டதாகும். இச்சுவடி 34 ஏடுகளைக் கொண்டதாகும். இதனை இம்மகாலுக்கு அன்பளிப்பாக அளித்தவர் திரு. S. கதிரேசன், (மோதிலால் தெரு, கும்பகோணம்) என்பவராவார். இந்நூல் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை.

காத்தவராயன் கதை குறித்த ஆய்வுகள்:

நாட்டுப்புறவியல் துறையைச்சேர்ந்த பலர் காத்தவராயன் கதைகளைப் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். 'காத்தவராயன் கதைகள் ஓர்

ஒப்பாய்வு' என்னும் தலைப்பில் எம்.ஃபில். பட்ட ஆய்வு செய்து அதனை நூலாகவும் வெளியிட்டுள்ளார் திரு. வாசுதேவன் என்பவர். 'காத்தவராயன் கதைப்பாடல்' குறித்து சில அரிய கருத்துகளைத் திரு. வானமாமலை கூறியிருக்கின்றார், மேலும் சிலர் காத்தவராயன் கதைப்பாடல் குறித்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளதாகத் தெரியவருகின்றது.

காத்தவராயன் கதையைக் கூறும் நூல்களுக்கிடையில் சிற்சில வேறுபாடுகள் உள்ளமையையும், சமூகவியல் கூறுகளையும், சமூகப் பழக்க வழக்கக் குறிப்புகளையும் இவ்வாய்வுகளால் நாம் அறியமுடிகின்றது.

காத்தவராயன் கதைச் சுருக்கம்:

உலகைக் காக்கும் சிவபிரானது செயலில் ஐயம் கொண்ட உமாதேவி சிவனைச் சோதிக்க எண்ணி ஓர் எறும்பைப் பிடித்து சிமிழில் அடைத்து வைத்தார். மறுநாள் அது ஓர் அரிசியை வாயில் வைத்திருக்கக் கண்டு வியந்த தேவியார் சிவபிரானிடம் தாம் செய்த செயலைக் கூற, அந்த எறும்பிற்குச் செய்த துன்பத்திற்காக ஒரு நந்தவனம் அமைத்து அந்தப் பாவத்தைப் போக்குமாறு சிவன் தேவியைச் சபித்துவிட்டார். உடனே உமையவள் அந்த நந்தவனத்தைக் காவல் செய்யக் காவலாளி வேண்டுமெனக் கேட்க, சிவனும் அவ்வாறே ஏற்பாடு செய்ய அந்தக் காவலாளியே "காத்தான்" என்னும் பெயரில் படைக்கப்பட்ட "காத்தவராயன்" என்பவன் ஆவான்.

காத்தவராயனின் தாய், தந்தை இன்னாரென அறிய இயலவில்லை. அவனைச் சேப்பிளையான் எடுத்து வளர்த்து வந்தான். ஆரியமாலை என்னும் பிராமணப் பெண்ணைக் காத்தவராயன் காதலித்துத் திருமணம் செய்துகொண்டான். ஆரியமாலையும் அதற்குத் தக்கவாறு அவனுடைய கின்னரம் இசைக்கும் திறமையில் மயங்கினாள். மேலும் காத்தவராயன் ஓந்தாயி என்ற பெண்ணையும் மணந்துகொண்டிருந்தான். அரசன் காத்தவராயனைப்பிடித்து வருமாறு கட்டளையிட்டான். சேப்பிளையான் தன் வளர்ப்பு மகனைப் பூவாயி என்பவளுடைய மதுக்கடையில் பார்த்துச் சிறைப்படுத்தினான். அரசன் விசாரணை செய்து, கழுவில் ஏற்றுமாறு தீர்ப்பு வழங்கினான். காத்தவராயன் கழுவில் ஏற்றப்பட்டு இறந்துவிட்டான். ஆரியமாலையும் மடிந்துவிட்டாள்.

இக்கூர்மியில் காத்தவராயன் கழுவேறி வெட்டுண்டபொழுது, அவன் கழுத்தில் மலர் மாலையாக மாறி விழுந்ததாகவும், தேவர்கள் பூமாரி பொழிந்ததாகவும், உயிர்த்தூண்டிதனைவிட்டு இறக்கி, உன்தோகையரோடு (ஆரியமாலை) நீ வாருமென்று தேவர்கள் அருள் புரிந்ததாகவும் அமைந்துள்ளது. மற்ற எல்லா நிகழ்ச்சிகளும் காத்தவராயனின் நான்கு கதைப் பாடல்களிலும் காணப்படும் இன்றியமையாத கதைக் கூறுகள் பெருமளவு ஒத்துள்ளனவாக அறியப்படுகின்றன.

கழுவேற்றப் பாரிவேட்டை விழா:

காத்தவராயனுக்கு ஆண்டுதோறும், பாச்சூரில் பங்குனி பௌர்ணமி நாளில் விழா நடைபெறுகிறது. இதைக் கழுவேற்றப்பாரி வேட்டை என்று கூறுகிறார்கள், இந்த விழா நடத்துவதற்கென்று 6 ஏக்கர் நிலம் மானியமாக விடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து கிடைக்கும் வருவாய் விழாவிற்குச் செலவிடப்படுகிறது.

பாச்சூரில் உள்ள சைவ வேளாளர் குடும்பம் ஒன்று (கூத்தூர் பிள்ளை குடும்பம்) இந்த விழாவை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. நான்கு நாள்கள் தொடர்ந்து இந்த விழா நடைபெறுகிறது. மேலும் ஆண்டுதோறும் வைகாசிப் பௌர்ணமியில் திருச்சியில் இருந்து சேலம் செல்லும் சாலையில் ஏறத்தாழ 20 கி. மீ. தொலைவில் இருக்கும் 'வாத்தலை' என்னும் ஊரிலும் நடைபெறுகிறது. பாச்சூரில் நடைபெறும் அதே அமைப்பில்தான் இவ்விழா நடக்கின்றது. பல ஊர்களில் இருந்தும் மருளாளிகள் எனப்படும் பலர் காத்தவராயன் வேடம் புனைந்து இங்கே வந்து, விடிய ஒரு சாமம் இருக்கும் வரையில் காத்தவராயன் கதையினைப் பாடகர் பலரும் பாட இவர்கள் கழுமரத்தின் அடியில் ஆடுகிறார்கள். பின் ஒவ்வொருவராகக் கழுவில் ஏறி இறங்குகிறார்கள்.

பாச்சூர், வாத்தலை ஆகிய இரண்டு இடங்களைத் தவிர இவற்றைச் சூழ்ந்துள்ள பல ஊர்களிலும் கழுவேற்றப்பாரி வேட்டை விழா சிறிய அளவில்

நடைக்கப்படுகிறது. பார்சூரில் இந்த விழா நடைபெற்ற பிறகுதான் மற்ற ஊர்களில் விழா நடைபெறுகிறது. இது மரபாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

தென்னார்க்காடு, தஞ்சை மாவட்டங்களில் உள்ள மாரியம்மன் கோயில் களில் கருவறையின் முன் மண்டபங்களில் காத்தவராயன் சிலை வைக்கப்பட்டு இருக்கிறது.

நூலின் அமைப்பு முறை:

இக்கும்மி 184 கண்ணிகளையும், ஓர் அறுசீர் ஆசிரிய விருத்தத் தையும் கொண்டுள்ளது. இக்கும்மியில் விநாயகர், தாயுமானசுவாமி சிவபெரு மான் ஆகியோரைத் துதித்தும், சபை வணக்கம் கூறியும் நூலாசிரியர் புனைந்த ஆசிரிய விருத்தப்பாடல்கள் நூலின் தொடக்கத்தில் இடம்பெற்றுள்ளன. அவற்றின்பின் கதை கூறும் கும்மிப்பாடல்கள் உள்ளன. நூலின் இறுதியில் ஓர் அறுசீர் ஆசிரிய விருத்தப்பாடல் கவிக்கூற்றாக அமைந்துள்ளது.

இந்நூலின் ஆசிரியர் பெரியசாமிகவி என்பவர். இவர் உயர் வேளாண் குலத்தில் அவதரித்ததாகவும், நாற்கவியில் வல்லவர் என்றும், மீனாட்சி சுந்தரதாசன் என்றும் நூலின் 5, 6, 7, 8 கண்ணிகளால் அறியமுடிகிறது.

இந்நூலாசிரியர், இக்கும்மிக்கு முதல் நூலாகக் 'காத்தவராயன் அம்மானை' என்ற நூலைக் குறிப்பிடுவதை,

'அம்மானையாக முன்னோர்கள் உரைத்ததை
அம்மானைக் கையோன் அடிபணிந்து
இம்மாநிலத்தினில் காத்தவ ராயன்மேல்
ஏத்திய கும்மி யுரைத்தனனே'

என்ற அடிகளால் அறியலாம்.

நூலாசிரியர் காலம்:

இந்நூல் எழுதப்பட்ட காலத்தை

"ஆண்டு விளம்பி வருஷமதில் திருவானதோர்
திங்களாம் தைமாதம்
பாண்டி சிறந்திடும் பூசமதிலங்கு
பாரும் பதினேழாம் தேதிதனில்"

என்ற இந்நூலின் அடிகளால் அறியலாம்.

நூலைப் பிரதி செய்தவர், காலம்:

இந்நூலினைப் பிரதி செய்தவர் பற்றியும், (படியெடுத்தவர்) பிரதி செய்யப்பட்ட காலம் பற்றியும்

இச்சுவடியின் இறுதியில் இடம்பெற்றுள்ள

'விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 17ந்தேதி குமாரவயலூர் சு, முத்து மதுரையா பிள்ளை எழுதியது'

எனும் குறிப்பால் அறியமுடிகின்றது.

காத்தவராயன் சுவாமி பேரில் கும்மிப் பாடல்

செந்திருமா துங்கமலத் திருவும் ஞானச்
    செகபரியும் நீங்காது திகழ வைகும்
சுந்தரஞ்சேர் வளமிகுந்த சோழ நாட்டில்
    சொல்லரிய அருள்சிறந்த திருச்சேர் கூத்தூர்
கந்தரத்தி லழகுமெய்யன்
    காத்தவரா யன்மீதில் களிப்பா யானும்
தொந்திவினா யகன்பதத்தைப் பணிந்து கும்மி
    சொல்லிட நல் வரமருள்வாய் துணையும் நீயே.

தாயுமானவசுவாமி துதி

ஆதியிலே மறையவன் தன் குலத்தில் வந்த
    ஆட்சியெனும் மடமயிலுக்காக முன்னாள்
பாதிவழி தனிலவதி கெற்பந் தாங்கிப்
    படுந்துயரம் நீயறிந்து பரிவாய் வேதச்
சோதியுரு வாய்நீயும் தாயு மானாய்
    சொல்லரிய மருத்துவமும் துணிவாய்ச் செய்தாய்
கோதில்லா மாமணியே மலைமேல் வாழும்
    கோமானே பணிந்துதினங் கூறு வேனே.

சிவதுதி

நச்சரவந் தனைப்புனைந்த பிட்சா டீசர்
    நானுனது பதமதனை நம்பி னேன்கார்
இச்செகத்தில் எனதுகுடி மரபைக் காக்கும்
    எம்பிரான் எனக்காத்த வராயன் மீதில்
கச்சணிந்த திருமார்புங் கலையு மின்னக்
    காலிலிடும் பொற்சதங்கை கலீரென் றாட
அச்சமில்லா மடமாதர் கும்மி தட்ட
    அடியேனுக் கருள்புரிவாய் கவிநான் சொல்ல

சபை வணக்கம்

வேதமுத லாகமங்கள் யாவும் தேர்ந்த
விவேகமுள்ள திருவடியார் வியங்கோள் பாதம்
தீதறவே யான்பணிந்து கும்மி சொல்வேன்
செந்தமிழோ ரிதன்பிழைகள் தெரிந்தால் தித்தி
சாதகமென் றாட்கொள்வ துங்கள் பாதம்
தமியேனைக் காத்திடுவாய் காத்த லிங்கம்
பாதமதை யான்பணிந்தேன் பெரிய சுவாமி
பாடலுக்குத் துணையருள்வாய் பரிவாய்த் தானே.

கும்மி

தண்டமிழ் வைகை நதியுடையான்—சேரன்
தங்கு மதிக்குடை யான்சோழன்
பண்டர சாண்ட புரமதுவாம்—திருப்
பாருந் திருசை மணிநகராம் 1

எண்ணுந் தலத்தி லியல்பெறவே—நாளும்
வண்ணம் சிறந்த புரிசைகள்சூழ்
நன்னய மோங்கிடுங் கூத்தூரில்—எங்கள்
நாதனாங் காத்தலிங் கேந்திரனாம் 2

பேரினி லானந்தக் கும்மிசொல்லச் - சிவன்
பிள்ளை வினாயகன் பொற்பதமும்
பாரி லறுமுக மானசதா—சிவ
பாலன் குமரன் பதம்துணையே. 3

செந்திரு மாதைப் பணிந்தேத்திக்—கலை
தேர்ந்த சரசுபதி தாள்வாழ்த்திப்
பந்தன மானதோர் செந்தமிழ்க் கும்மியைப்
பாடு மெனக்கவி பாடியவன் 4

அந்தரர் போற்று மதுரையில்வாழ்—சோம
சுந்தர நாத னருள்சிறந்த
சுந்தர நாற்கவி வல்லவன் மீனாட்சி
சுந்தர தாச னவர் சீசன் 5

மேழிக் கொடியோன் அதிதீரன்
 வேளாளன் குலத்தி லவதரித்தோன்
ஆழிக்கு மிஞ்சுந் தமிழ்வாழ்க்கை—வெகு
 அன்பு சிறந்த தவமுடையோன். 6

மன்னர் புகழும் அழகுபிள்ளை என்னும்
 மன்னவன் செய்த தவமதனால்
நன்னய வான்புகழ் பெற்ற திருக்கவி
 நாதன் குமரன் அடிபரவும் 7

பேருக் குடையான் பெரியசாமி கவி
 கூறிடும் செந்தமிழ்க் கும்மியதைத்
தாரு மலருடை யிந்திர குலாதிபன்
 தங்குங் குலத்தி லவதரித்தோன். 8

பத்தி சிறந்த பதியுடையான் நல்ல
 முத்துக்குமார னருள் தவத்தோன்
சித்தி பெருகும் வயித்தினா தேந்திரன்
 செப்பெனச் செப்பினான் செந்தமிழை. 9

நல்ல காத்தய்யன் பிறப்பின் கதைத்துவக்கம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

ஆதிசிவன் பெருமைதனை யறியாமல்
 உமையவளும் அந்நாள் செய்த
சோதனையா லபசாரந் தொலைப்பதற்காய்
 மலர்வனத்தைத் தொகுப்பாய்ச் செய்து
மேதினியி லிதற்காகக் காத்தலிங்கம்
 பிறந்ததற்கு விளங்கப் பின்னும்
கோதிலா தருளடைந்த சரித்திரத்தைக்
 கும்மியதாய்க் கூறு வேனே.

(வேறு)

ஈசனுமையாள் தனைப்பார்த்துப் பெண்ணே
 வாசஞ் சிறந்த புவியதனில்
பேசும் பிராணி எறும்பு முதலிரை
 போட்டு, வருவே னென உரைத்தார். 10

மங்கை சிரித்து மதியாமல்—ஈசன்
சங்கை யறிந்திட வேணுமென்று
பங்கமில்லாத சிமிழி வெறும்பதைப்
பாவினை யாய் வைத்து மூடினளே. 11

வந்தான் புவியினில் தானிறங்கி—நல்ல
வாருதி சேரு முலகுதனில்
பந்தன மான யிரையளித்துச்—சிவன்
பாங்கா யடைந்தா னுமைபுரத்தே 12

ஈசன் வரவை யுமையறிந்து—மதி
சேத முடைய மடமையினால்
பாசமுடனே சிமிழெடுத்துப்
பரமேஸ்வரி பார்த்து மதிமயங்கி 13

கால்கை நடுங்கி யுடல்பதறி—முன்னங்
காலன் தனையுதைத் தோன்பதத்தில்
சாலவே போற்றி வணங்கி நின்றாளந்தத்
தையலைப் பார்த்துச் சிவபரனும் 14

மாதேநீ செய்தது தப்பாகும்—இந்த
மாதவத் தோர்களுக் கொப்பாது
பாதகந் தீர வகையுரைப் போமிந்தப்
பாவனை யான கைலைதனில் 15

செண்டு மலர்பிட்சி மல்லிகைமுல்லை
செவ்வந்தியுடன் வில்வம் ரோசாவும்
கண்டு மொழியேநீ நந்தவனம் வைத்துக்
காவலும் போட்டுமே நேசமுடன் 16

பூசைக் குரித்தாகச் செய்வா யாகிலந்தத்
தோஷ முனக்கு நிவர்த்திஎன்று
ஆசைக் குகந்தோ னுரைத்திடவே யம்மை
ஆமென்று சொல்லியே சம்மதமாய் 17

நந்த வனத்தையும் செய்தாளே—சொந்த
நாயகன் பூசைக் குகந்தாளே.
சந்திர சேக ரனைப் பார்த்துக்—காவலும்
தானே புரிந்திட வேணுமென. 18

மங்கை யுரைத்த மொழிகேட்டுச்—சிவ
சங்கரன் சம்மதித் தாமெனவே
அங்கை யிலங்கிடு மான் அதனைப் பரன்
பங்க மில்லாம லதை நோக்க. 19

மூலப் பொருளாய் முதல்பொருளாய்—வந்த
முத்தனு மான சிவபரனும்
ஞால மதில்பிரமம் காட்சி யடைந்திட
நாட்டிய அஞ்செழுத் துச்சரிப்பால் 20

வந்தாண்டி காத்தான் வந்தாண்டி—சிவன்
தந்திடும் போது சுந்தரமாய்ச்
சந்தத மரூபமதன்போல் வெகு
தாஷ்ட்டிக மாகவே யோக்கியமாய். 21

காம னிவனோ கலைமகள் நாயகன்
கோமகனோ சந்திர சூரியனோ
சேம முடனே யவதரித்தோன் இவன்
சேதியைக் கேளடி மாதரசே. 22

ஈச னுமையாள் தனைப்பார்த்துப்—பெண்ணே
வாசஞ் சிறந்த மலர்வனத்தைத்
தேசம் புகழ இவன் கார்ப்பான்—இவன்
சேதியைக் கேள்கார்த்த லிங்கமடி. 23

என்று சிவனு முரைத்தி டவேபர
மேஸ்பரி யும்சரி யாமெனவே
நன்று மகனே யடாகாத்தான்—நீயும்
நந்த வனமதைக் காருமென்றாள். 24

ஆட்சி யடியைப் பணிந்தாண்டி—இவனா
தாட்சியில் லாமல் எழுந்தாண்டி
காட்சி யுடையதோர் நந்தவனம—அதைக்
கார்த்ததி னால் கார்த்த லிங்கமடி. 25

நீதி வழுவா தவன்காத்து—ரைச்
சேதியும் பூரணச் சோதியதாய்ப்
பாதி மதியைத் தரித்தபரன்—செய்த
பாவனையைச் சத்தே கேளடியோ. 26

சத்திக்குகந்த பணிவிடையார்—நல்ல
புத்தி சிறந்த மடவார்கள்
தித்திக்கும் தேன்மொழி வாயுடையார்
சத்தகன்னி மாரேழுபேர் சீருடையார், 27

நந்த வனமதில் வந்துமே பூவதைச்
சொந்த முடையோ னறியாமல்
சந்தனங் குங்குமம் சேர்ந்தணை கொங்கையர்
தானே எடுப்பார் மலர்நிதமும். 28

காத்தா னறியான் கபடறியான்—வஞ்ச
கன்னியர் மோசம் தனையறியான்
பூத்த மலருக ளில்லாத தாலந்தப்
பூங்கா வனமதைச் சுத்திவந்தான். 29

ஏது கபடமென நினைந்தா னந்தப்
பரமேஸ்ட்டி தனையே தொழுதுவந்தான்
வாது சிவனே யறியேனே—இந்த
மார்க்கந் தனையே யெனவே நொந்தான். 30

சித்தங் கலங்கி உடல்வேர்த்தான்—அந்தப்
பித்தன் செயலோ வெனத்திகைத்தான்
உத்தமி மாதர்அறுவருடன்—கூடி
ஊடாடி நந்த வனம்புகுந்து 31

பூவைக் குடவையில் தானெடுத்து—வெகு
போதர வானதோர் பொய்கைதனில்
பாவைமார் கூடியே ஸ்நானமது செய்யப்
பார்த்தா னுடல மதுவேர்த்தான். 32

ஆரென்று கேட்கவுங் கூடவில்லை! — இவர்
பேர்வந்த காரணம் தோணவில்லை!
சீரே மிகுந்திடும் ஆயென வேகமாய்ச்
சென்றே நடந்தந்தப் பூவையரில் 33

மங்கை யொருத்திக் கரசிமிக வெகு
சங்கை நிறைந்தபூ வாழ்வரசி
செங்கை வளையணி சங்கணத்தாள்-வெகு
தீவிர யான அழகுடையாள். 34

ஆடை தனைஎடுத் தாரிய னோடியே
பார்வை மிகுந்ததோர் புன்னைமரம்
வாடை யணிந்திவ னேறிட வேமணி
மங்கைய ரேழ்வரும் தான்தேடி 35

வந்தார்கள் சுத்தி வனமெங்கும் தேடிப்பின்
மாதவன் தன்னையுங் கண்டார்கள்
கந்தரம் தூக்கி யுயரநோக்கி — இவன்
காமனோ கந்தனோ சந்திரனோ 36

ஆரோ வெனவே யவர்திகைத்து — நீயும்
ஆரென்று கேட்டா ரவர்முகத்தைப்
பாரோர் புகழும் பரிமணத்தான் — வெகு
பாவனை யாகவே செப்பலுற்றான். 37

மங்கையுங் கெங்கை தனைச்சுமந்தோன் — அவன்
அங்கை யிலங்கிடு மான்வயத்தில்
சங்கை யுடனே யவதரித்தோன் என்று
சாற்றுவார் காத்தவ ராயனென்றே. 38

மன்னன் உரைத்த மொழிகேட்டு
மகராசிகள் பேழ்வரி லார்வருமே
நன்னய மாகச் சிவனிடத் தோடியே
நாடி யழுது முறையிடவே 39

சங்கை நடந்த விவரமெல்லாம் — சிவ
சங்கரன் கேட்டுளந் தான்வருந்தி
மங்கை யுமையாள் தனையழைத்து வந்து
வாதனை தன்னை யுரைத்தனரே. 40

புன்னை மரத்தின் அடியில் வந்தாள் அந்தப்
பொற்கொடி கோலந் தனையறிந்து
அன்னை அரனைப் பணிந்தானே — காத்தான்
அப்பறம் நின்றுமே தான்தொழுதான். 41

மித்துரு வில்லாமல் காரும் வனமெனப்
பத்தினி மாரை நீ கற்பழித்தாய்.
புத்தியில் லாமல்நீ செய்ததற் காய்ப்பிடி
சாபமென் றேசிவன் தானுரைத்தார். 42

சாப மடைந்ததின் பின்னாலே — இவன்
சங்கதி கேளடி மின்னாளே!
பாப மடைந்த எழுவரின் ஆரியன்
பாங்கும் உரைக்கிறேன் கேளடியோ ! 43

அறுசீர் ஆசிரிய விருத்தம்

ஆதிதன் கிருபை யாலே
அரியதோர் தவத்தோன் வந்து
வேதியன் மகவாய்த் தோன்றி
விளங்கிடும் தவமே செய்து
சாதியில் வெவ்வே றாகத்
தனித்துமே யேழு பேரும்
கோதிலாப் பரத்தைச் சார்ந்த
கொள்கையைக் கூற லுற்றாம்.

(வேறு)

மன்னு புகழ்சேர் களத்தூரில்
        மறையோனு மகவின்றி யேவருந்தி
நன்னு மிசையத் தவர்புரிந்து
        சுபலக்கண மானதோர் நாள்தனிலே. 44

வந்து மகவெனத் தான்பிறக்க—அதைச்
        சொந்த மறையவ னும்பார்த்து
அந்தோ சிவச்செயல் ஆச்சரியம்—இது
        அல்லாரும் பாரு மெனஉரைத்தார். 45

கோத்திர நாசங் குடிநாசங்
        கொடிசுத்திப் பிறந்திடும் இம்மகவை
நேத்திரத் தாலும்நீ பாராதே—என்ன
        நெஞ்சம் தளர்ந்து மனைவியுடன் 46

காத்தவ ராயன் தனைஎடுத்துக்—கடுங்
        காட்டினில் சென்று மதலைதனைப்
பூத்திடும் வெள்ளெருக் கன்குத்தின் தன்னடி
        போட்டு வெகுவாய் நடந்துவிட்டார். 47

தேவாதி தேவன் கிருபையினால்
        சிறுபா வனையான் பலனடைந்து
காவலர் மெச்சிடு மான்பிடி மங்கலம்
        கன்னி பறைச்சியும் வந்தாளே. 48

மைந்தனைக் கண்டு மனமகிழ்ந்தாள்—சிவன்
        தந்தன ரென்றே யவளெடுத்துச்
சொந்த மனைக்கவள் தானேகிச்—சுதன்
        சுந்தர மான குழந்தைஎன்று 49

பத்தி யுடன்மூன்று நாளிருக்க—மனை
        பத்தி யெரியக் கனவுகண்டாள்!
புத்தி சிறந்த பறையனும் பிள்ளையைப்
        போடி எடுத்து நமக்கிதுவும் 50

கூடாது சேப்பிளை தன்வீட்டில் நீயும்
கூட்டுமென் றான்அவள் கூட்டியபின்
வாடாத முல்லை மலரானை—வெகு
வாதையில் லாமலே தானெடுத்துத் 51

தந்திட வாங்கி யவள்வளர்த்தாள்!
சொந்தத் தையலும் பாலு முலைகொடுத்துக்
கந்தனைப் போலே வளர்த்தாளே!
காத்தலிங்க மெனப்பேரு தானுமிட்டு. 52

மாணிக்கத் தொட்டில் தனிலேத்தி — வெகு
மங்கல மாகவே பூஷணங்கள்
காணிக்கி வாய்த்த சிகாமணியே தம்பி
காத்தானென் றேவெகு சாத்திரமாய் 53

ஆரிரா ரோதம்பி ஆரிரா ரோவென
ஆட்டினார் தொட்டிலைப் பாட்டுப்பாடி
சீரா யுயர்ந்து வளர்ந்திவனும் வெகுவாய்ச்
செப்பும் படிவித்தை தான்படித்தான். 54

பத்துடன் றெண்டு வயதாச்சு — பாலன்
பெத்தவள் பேச்சைத் தடுத்துவிட்டுக்
கத்தி யுடன்பல ஆயுதம் சுண்டுவில்
கையி லெடுத்து வனமேகி 55

வேட்டைக ளாடிட வந்தானே!
வெகுதாட்டிக மாகவே காத்தவனும்
காட்டில் நடந்து வரும்வழியில் — அந்தக்
காளியின் சன்னதி கண்டானே! 56

முத்திக் குகந்த பொருளாகும்!—இதைப்
பத்திக்க நம்மாலே கூடாது.
வெத்தி புரிந்து விலங்கின் மானதை
வேட்டைக ளாடுவோம் நாமெனவே 57

வில்லை வளைத்து மரம்நோக்கி—அந்த
வேணதோர் பட்சியைத் தான்வதைத்தான்!
அல்லவன் பட்சிகள் பத்திர காளிக்கு
அபயமென் றேயது கீழ்விழவே. 58

பத்திர காளி மனம்பதறி—அவள்
பாவனை யான படைதிரட்டிப்
புத்திரன் தன்னை வதையுமென் றாள்—படை
போன விதங்கள் தெரியவில்லை. 59

கையினில் சூலப் படையுடையாள்—இந்தக்
காத்தவ ராயன் தனைப்பார்த்து
ஐயனோ சக்கரக் கையனே என்றுமே
அம்மை திகைத்து மதிமயங்கித் 60

தம்பிநீ யாரு எனக்கேட்டாள்!—அந்தத்
தையல் திருவடி தான்பணிந்தான்!
அம்புவி தன்னிலே கீர்த்தி பெறுவாய்!—நீ
ஆசிரு பாதம் எழுந்திரென் றாள். 61

மூந்தின சங்கதி தானுரைத் தான்வள்
தந்தவரங்கள் அனேகம் பெற்றான்.
மந்திர வாள்மிகத் தான்வாங்கிப்—பூசை
வாங்க உறுதியும் பெற்றானே! 62

அன்னை அருளை யடைந்தானாம்—அந்தச்
சென்னப்பன் தன்னைச் செயித்தானாம்.
நன்னய மாகவே விடுவத்தா னந்த
நாதன் செயல்தன்னைக் கேளீர்களோ. 63

பிச்சாண் டார்கோவில் பிராமணன் வீட்டினில்
நச்சர வம்புனைந் தோன்செயலால்.
மச்ச விழிநிகர் ஆரிய மாலையும்
வந்து பிறந்தாள் அவதாரத்தால். 64

மங்கையும் அங்கு வளருகிறாள்!—இந்த
மன்னவன் சேதியைச் சொல்லுகிறேன்.
சங்கை நிறைந்திடுங் காவேரிப் புதுநீரில்
ஸ்நானமது செய்ய வந்தானே. 65

தேவ ரடியார்கள் கண்டார்கள்—இவன்
தேவனென மயல் கொண்டார்கள்!
தாவ மிகுந்தரன் ஆணைஎன்றார்—இவன்
சாதிப் பறையன் தொடாதேஎன்றான். 66

எங்களை ஏய்க்க முடியாது—உந்தன்
சங்கை யறிந்திட மட்டிலுமே
இங்கேநீ நில்லென்று கூட்டிவிட்டார்—மதன்
எய்திடும் அம்பிலே பட்டுவிட்டார்! 67

தட்டி மறுமொழி சொல்லாமல்—இவன்
தங்கினான் தந்தையும் வந்துகண்டான்
கட்டி யணைந்திட மோகமுற்றார்—பெண்கள்
காரணம் சொல்லவுங் கேட்டனனே! 68

தந்தை மொழிக்கு வழிவிடுத்தான்—இவன்
ஸ்நானமும் செய்து வெளியேவந்தான்.
பந்து முலைமார் துயர்ந்தார்கள்—இவன்
பாவனை யாய்விடு சேர்ந்தானே. 69

கட்டுக் கடக்க முடியாமல்—அந்தக்
காவலை நீக்கியே சென்றவர்கள்
தொட்டி தனிலே குழந்தைகண்டார்—வெகு
சோப மடைந்து வெளியேவந்தார். 70

தாசியைத் தேடியே ஆள்விடுத்தார்!—காத்தான்
சங்கதி பங்காளி சொல்லிவிட்டான்!
ஏசிப் பறையனைக் கூட்டிவரச்—சொல்லி
எங்கும் பெருஞ்சத்த மானதுவே! 71

ஆரிய னும்பறைச் சேரிசெய்தான்—அதில்
ஆளா யிருந்து துணியும்நெய்தான்.
காரிய மில்லைநீ வாருமென்றான்—தடி
கையி லெடுத்தான் கிழவனுமே. 72

கோவிலார் பார்த்து நகைத்தாரே!—அவன்
கூனி நடந்து குறுகுறுப்பாய்ப்
பாவனை யாகவே நந்த வனமதில்
பார்க்க முடியா தழகுடனே. 73

கத்தி மரத்தி லறைந்தானே யிதைச்
சுத்தி நின்றோரைப் பிடுங்குமென்றான்.
சத்தி யில்லாமலே நின்றார்களந்தக்
கத்தியைத் தானெடுத்தே நடந்தான். 74

சேவக ரோடி அழுதார்கள்—அந்தச்
சேதியை ஸ்தானீகர் தான்கேட்டுக்
காவலனாம் ஆதியப்பனிடம் சொல்லக்
கட்டுமென்றான் மல்லர்கிட்டு மென்றான். 75

காவேரி யாத்தி லிவனிருந்தாள் அவர்
கட்டிய சோறெல்லாங் கொள்ளைகொண்டான்.
பாவனையாகவே காத்தானெங்கே சொல்லும்
பாருமிதோ வாரா னென்றுரைத்தான். 76

புல்லுக் கட்டோடங்கு வந்தாண்டீ—அவன்
மல்லுக் கிசைந்தபேர் திட்டமுடன்
நெல்லுக் கதிரதை நெட்டியிட்டாப் போலே
நேரே மடிந்தவர் தாம்போக. 77

ஆத்தில் சிலரை மடித்தானே காத்தானே
நேர்த்தியாய்த் தன்வீடு சேர்ந்தானே.
சாத்திய வார்த்தையைத் தான்கேட்டு ராசன்
சங்கதி சொன்னானே மந்திரிக்கு. 78

தூது விடுத்து வரவழைப்பேன் என்றான்
போதுமென் றேராசன் சம்மதித்தான்.
வாது புரியாமல் வந்தானே—வெகு
வாகாய் வரிசைகள் தந்தானே. 79

இட்டந் தெரிந்த மகாராசன்—அந்தப்
பட்டந் தனையுமே தப்பாமல்
கட்டளையாகவே காருமென்றான் அந்தக்
காவலையுங் காத்தான் காத்துவந்தான். 80

காஞ்சி நகர்க்கு வழிகூடி யேழு
கன்னியர் தங்குஞ்ற வாடி
வாஞ்சை மிகுந்திடும் செங்க மகாமுனி
வாது கடந்து வெளியேறி 81

மாசிமலை யானைக் கண்டானே யவன்
பேசிய வாதுக்கக் கொண்டானே!
தேசிக னந்தவழி கூடி வெகு
தீவிர மார்க்லே போகையிலே 82

ஆட்சியெனும் சவுதர்பாணைக் கண்டவன்
தார்ஜ்ச்சி யில்லாமலே மோர்குடித்துப்
பேச்சியே யிந்தப் பறவையைத் தாவென்ப
பின்னியே கோபமா யில்லையென்றாள் 83

கோழிப் பறவையைத்தான் மடித்தானந்த
நாழிகையில் குறந்தான் கூறி
வாலிபன் போலே குறிபேசி—அங்கே
வந்தானே சேதிகள் தந்தானே. 84

மாதேயுன் கோழியுந்தான் பிழைக்கச் சொன்னாம்
வார்த்தையைக் கேட்டு தேர்தகளாம்;
நீதமுடையவன் காத்தலிங்கம் பேரை
நிச்செயம் சொல்லியே நீர்தெளித்தாக் 85

செத்த பறவை உயிர்பிழைக்கும் என்ற
சேதியை மங்கையும் நம்பாமல்
மத்தகம் போல மனமுடை யானந்த
மாசி மலையான் தனைநினைந்தாள். 86

மங்கை நினைப்புங் கைகூடாம லந்த
வாறணா மீறியே வாராமல்
சங்கை யுடன்கோழிதா னெழும்பப் பூசை
தானே யடைந்தான் அவளிடத்தே. 87

கும்ப முனியின் அருளடைந் தானவன்
தம்பிநீ காத்தமுனி யேஎன்றான்.
தெம்புடன் சென்று கருப்பாயி பால்வைத்த
செம்மை யுடதயிர் தாருமென்றான். 88

கம்பை காமாட்சிக் குகந்ததென்றாள்—இவன்
வம்புகள் செய்தவன் தான்குடித்தான்.
தெம்பு சிறந்த இடைக் கருப்பனிடம்
சேதிகள் சொல்லி அழுதாளே. 89

தங்கை யழுகுரல் கேட்டும்—அவன்
எங்கே என்றுதடி கைப்பிடித்து
பங்கமில் லாத இடைக் கருப்பனுடன்
பாவனை யாகவே காத்தவனும். 90

சண்டை பிடித்துச் சரியா னாரவர்
சங்கதி இந்துடன் காத்தலிங்கம்
அண்டியிடைய் கருப்பனுடன் கூடி
அய்ய ரிருவரும் காஞ்சிபுரம். 91

நந்த வனத்தை யிவரடைந்தார்!—வெகு
நண்புடன் செய்ப அருந்தவச்
சிந்தை மகிழ்ந்துகா மாட்சியையும்—எங்கள்
தேவன் ஏகாம்பர நாதனையும். 92

சிந்தை மகிழ மனம்திருத்தி
யிந்த உத்தமன் ஊசிதனை நிறுத்தி
கைத்தலமீதில் கிண்ணாரமும் வைத்தொரு
காலை மடக்கியே கீழ்முகமாய்த் 93

தேவரொடு மூவ ரொப்பாக—நல்ல
தீவிர மான அருந்தவசு
பாவனை யாய்மூன்று நாளிருக்கப்—பர
மேஸ்பரிக்குப் பணி பாங்கியர்கள் 94

கன்னியரேழ் பேரும் வந்தாரே காத்தான்
பண்ணும் தவமதைக் கண்டாரே.
சென்னி வணங்கி யுமைக்குரைத்தார்—அந்தச்
சேதி பரனுக் கவளுரைத்தாள். 95

மங்கைக் குடையோன் மதிச்சடையோ னந்தப்
பங்கமில் லாத உமையுடனே
சங்கையுட னவன் வந்தானே—காத்தான்
சங்கை யறிந்திடத் தான்மறைந்து 96

பூதத்தை விட்டுத் தவமதை நீக்கியே
பேதகம் செய்யு மெனஉரைக்க
நீத முடையதோர் பூதமது சென்று
வேதியன் போலவே வாய்பேசி 97

என்ன வரத்தைக் கொடுப்பானடா—சிவன்
முன்னமே பிச்சைக்கைக் கொண்டானடா.
மின்னைச் சுமந்தவன் அக்காளை மீதினில்
மேவி வருவது மில்லையடா. 98

பூத முரைத்த மொழிகேட்டு—நல்ல
போதர வானதோர் காத்தலிங்கம்
ஆதர வான சிவனுடன் அம்மையும்
அன்னையும் பின்னே வராதபடி 99

தங்கினா லென்னுயிர் தங்காது—இது
சத்தியமான தவமே என்று
மங்கை பங்காளனை யுச்சரித்துமணி
மந்திர வாளதைக் கைப்பிடித்தான். 100

கத்தியைக் கந்தரமீதில் வைத்தாளிதைச்
சத்தியும் சிவனுமே தான்பார்த்துப்
பத்திக் கெடுதல் படுபாவம் வந்திப்போ
பார்மீதில் நம்மையும் சேருமென்று 101

ஈசன் பிரசன்ன மானாரே—வெகு
நேச முடையதோர் பத்தனுக்குப்
பேசு மனேக வரங்கொடுத்தான்—நீரும்
பேசாம லென்கூட வாருமென்றான். 102

ஆரியன் ஆரிய மாலை கைக்கொள்ளப்
பாரினில் வாரு மெனப்பேச
நாரி பங்காளன் நகைத்தானே—இது
ஞாயமோ நீசொல்லும் நான்வரவும் 103

கூடுமோ கூடாதென உரைக்க எங்கள்
கோமா னெனுங்காத்த லிங்கமுமே
பாடும் புகழோன் கழுத்தறுக்கச் சென்று
பாவனை பார்த்தவன் சம்மதித்தான். 104

ஈச னுமையாள் அகத்தியனும்—வெகு
நேச முடையதோர் பத்தனுக்கு
வாசம் சிறந்திடும் தேவதைக் கூட்டமாய்
வந்தாரே பச்சை மலைநோக்கி. 105

மங்கைய ரேழ்வரும் வந்தார்கள்—நல்ல
தங்குங் கரும னுகந்தானே.
பங்கமில் லாத தோர்பூசை செய்யயிவன்
பாரும் பரம னடிபணிந்தான். 106

ஆரியனே நீயும் ஆரிய மாலையைப்
பாரினி லேகிச் சிறையெடுத்துக்
காரிய மாக வருவா யெனப் பரன்
நேரி லுரைத்த மொழிகேட்டுச் 107

சித்த மகிழ்ந்து வெளியே வந்தான் தனைப்
பெற்றிடும் அன்னையும் தந்தையுமே
உத்தமன் தன்னையும் காணாமல் அவர்
ஓடி யலைந்து மனம்வருந்தும் 108

போதவன் வீட்டில் அடைந்தானே!—அந்த
மாதவன் கண்டு மனம்மகிழ்ந்து
நீத முடையதோர் காஞ்சி வனந்தனின்
நேர்மையைச் சொல்லியே யஞ்சளத்தான் 109

பின்னும் சில நாளிருந்தானே!—அவன்
மன்னுபுகழ் சேரும் காத்தவனும்
மன்னவன் பெத்த மகராசி யெனும்
மங்கையாள் ஆரிய மாலைதன்னைப் 110

பாடி எழுந்து படிநடந்தான்!—புதுப்
பாட்டெனக் கேட்டவர் தோதகமாய்
வாடிநீ தாதியென் றாரிய மாலையும்
வந்து காத்தானெனக் கண்டானந்தமாம். 111

பார்த்தவள் வேர்த்து மனம்வாடி—வேதன்
பாவனை யாகவே இப்படியாய்
மூர்த்திய தாகப் படைத்தானோ என்று
மோகம தாக வவளிருந்தாள். 112

ஆரிய மாலையைக் கண்டானே!—வெகு
காரிய மென்றே யிவர்நடந்து
பாரிய பாச்சுரில் பூவாயி என்னும்
பாவை இடத்தில் மதுக்குடித்தான். 113

வீட்டினில் வந்து மறுநாளி லந்த
நாட்டில் சிறந்த பவளமதை
போட்டிடுஞ் செட்டின நடந்தானந்தப்
பூவையாள் கையில் தரித்தானே 114

முந்தின வேஷந் தனைக்காட்டி அதன்
பிந்தின நாளில் வளையவிட்டான்
தந்திரம் செய்துபின் வண்ணானாய்—அவன்
தையலிடத்தில் புடவை தந்தான். 115

கட்டிய மூட்டை இறக்கிவைத்தான்!—சேலை
கட்டக்கொடுத்தான் அவளதையும்
கட்டியே பார்த்து முடியாமல்—அது
கைநழுவக கண்டு தான்நகைத்தான். 116

ஆரியன் பார்த்துச் சிரித்தானே!—அந்த
ஆரிய மாலையும் நாணிநின்றாள்.
காரிய மாகமுன் காரண வேஷத்தைக்
காட்டி இவனும் நடந்தானே! 117

மாளிகை வந்து மகிழ்ந்தானே!—அந்த
நாழிகை யானதோர் நல்தினத்தில்,
வாலிபப் பெண்ணைச் சிறைஎடுக்க—மனம்
வைத்தவன் வேஷமிட் டேநடந்தான். 118

கின்னரிப் பாட்டையுந் தான்கேட்டு—மாலை
மன்னவன் வந்தாரென் றேமகிழ்ந்து
அன்னை யிடத்தில் அவளோகி யானும்
ஆத்துக்குப் போயிநான் தீராடி, 119

வாறே னெனவே அவளுரைக்க—அந்த
வார்த்தையைக் கேட்டுமே தாய்தடுக்க,
நேரே அவளிடம் உத்திரவு பெத்துக்
நேரிழை தங்கக் குடமெடுத்து 120

மன்னவன் காத்தவ ராயன் முன்செல்ல,
மங்கை நடந்திவள்பின் னேசென்று
நன்னய மானதோர் கொள்ளிடந் தன்னிலே
நங்கையு மன்னவ னும்மிறங்கிக் 121

கூந்த லவிழ்த்துமே ஸ்நானஞ் செய்து,பின்பு
கோதையுந் தங்கக் குடமீதில்
பாந்த முடன்அவள் நீரெடுக்கச் சாமி
பாங்காய் விடுத்த பழமதுவும் 122

நீரின்மே லோடிக் குடத்தி லதுவீழ
நேரிழை கண்டுகை யாலெடுத்து
வாரியே மூக்கில் முகந்தாளே பெத்த
மாதா பிதாவையுந் தான்மறந்தாள். 123

செப்புக் குடத்தை யிறக்கிவைத்து—மாலை
ஒப்பிட்ட வன்கூட வேநடந்தாள்.
தப்பிதம் என்கூட வாராதே என்று
சாட்சிவைத்தான் மாட்டுக் காரர்களை 124

மங்கையும் நீதி சிலஉரைக்க—அந்தச்
சங்கை யறிந்துமே காத்தவனும்
பங்கமில் லாது முதலைப்பார் மீதினில்
பாவனை யாகவே கூட்டிவந்தான். 125

மண்டபம் மாளிகை மேல்வீடு—முதல்
மங்கல மாகவே தான்வகுத்து
அண்டர் பிரானோடு அம்மையும் தேவரும்
அங்கு வரவே நினைந்தானே. 126

காத்தான் நினைத்த நினைவறிந்து
கயிலாச பதியுடன் தேவர்களும்,
மாத்திரைப் போதங்கு வந்தாரே!—திரு
மங்கலம் செய்து முடித்தார்கள். 127

தேவர் முதலரசன் சென்றாரே!—வெகு
தீவிர மாயன்ன முண்டாரே!
பாவனை யாகத் தனித்திருக்கேன்!—உயிர்ப்
பாங்கியர் வேணு மெனஉரைத்தாள். 128

நல்லதென்றே வயிரசெட்டி பாளையத்தில்
நாடியே சென்றுமே காத்தலிங்கம்
கள்ளம தாகவே செட்டிவேஷங்கொண்டு
காட்டில் ஓந்தாயியைக் கூட்டிவந்தான். 129

மாலையைக் கூவியே காத்தவனு மிந்த
மங்கை என்தங்கையாம் பாளையத்தாள்,
சாலஇருவ ரிருங்களென்றான்—மாலை
தாய்தந்தை சங்கதி சொல்லுகிறேன். 130

மங்கையும் கெங்கைக்குச் சென்றாளே!—அவள்
எங்கேஎன் றேஅவள் தாய்மாமன்,
கங்கை யுடனவர் தேடிவந்தார்—தங்கத்
தண்ணீர்க் குடமதைக் கண்டார்கள். 131

மாதையுங் காணாம லெங்கும் பார்த்துவெகு
வாதை யுடனே அவர்தேடிப்
பாதை வழிதனில் மாடுமேய்க்கும்—சிறு
பால ருரைத்தார்கள் சங்கதியை, 132

சங்கதி கண்டவர் ராசனிடம் சொல்லச்
சந்திரன் போலொளி ஆதியப்பன்
மங்களவா னாம்படிக் காவல்செய்யும்
மன்னவ னாம்அவன் சேப்பிள்ளையான், 133

அவனைக் கூட்டி வரும்படி ஆள்விடுத்தான்—மகள்
கோதையைச் சிறைகொண்ட சங்கதியை
நாட்டி லறிந்துமவ னையிங்கே—தேடி
ஞாய முடனொரு வாரமதில், 134

எந்தன் சமூகத்தில் கட்டியே வாவெனத்
தந்தையும் தேடி மிக அலைந்து
மைந்த னுக்குமது வுங்கறி தந்திடும்
மாதெனும் பூவாயி தன்னிடத்தில் 135

போதை கொடுத்து மதிமயக்கி எந்தன்
புத்திரன் தன்னைப் பிடித்தெனக்கு,
மாதேநீ தந்தால் வெகுமான முனக்கு
மயங்காமல் நானுங்கொடுப் பேனென்றான். 136

சம்மத மென்றேபூ வாயியுங் காத்தானைத்
தானே மயங்க மதுக்கொடுத்து
அம்மதம் போல மதகரியான் தன்னை
யானையைக் கட்டியே வாறதுபோல், 137

சங்கிலி யாலுங் கயறானுங் கட்டச்
சங்கை யுடனே தெரித்திடவே!
தங்கிய புஷ்பத்தின் யானையி னாலவன்
தந்தையுங் கட்டக் கட்டுண்டனனே. 138

கட்டிய கட்டோடே முன்னும் பின்னுமாகக்
காவல னாதியப் பேந்திரனிடம்
இட்ட முடனே விடுத்தானே!—ராசன்
சேதியைக் கேட்டானே ராசனிடம். 139

மங்கையை நானும் தொடரவில்லை, யந்த
மங்கைய ரென்மேல், மதிமயக்கால்
சங்கை யுடனே தான்சாட்சி முகாந்திரம்
சாற்றவே ராசனும் சம்மதித்து. 140

உந்தன் மீதிலந்தக் குற்றமில்லை—நீயும்
தந்தை யுடனே படிக்காவல்,
சிந்தை மகிழ மணம்புரிந்து உந்தன்
தேவி யுடன்கூடி வாழுமென்றான். 141

ராச னுரைத்த மொழிகேட்டுப்—பதில்
வாசகம் காத்தானு மேதுசொல்வான்
பாசம் நிறைந்த புவிதனிலே!—இனிப்
பாங்குடன் தங்கவே ஞாயமில்லை. 142

ஈசன் வரமும் சரியாச்சு!—உந்தன்
எண்ணம்போ லேகழு வேறுமென்றான்.
போசன் அறிந்துமே தச்சர்கொல்வர் தம்மைப்
போயவன் சொல்படி செய்யுமென்றான். 143

மைந்தன் நடக்கும் வழிதனிலே!—அவன்
தந்தை எனக்கென்ன சொல்லுமென்றான்.
எந்திடம் பேரெனக் குள்ளமட்டும்—புகழ்
தந்திடும் கீர்த்தி எனஉரைத்தான். 144

காத்தவராயனும் பாச்சூறு மேடையில்
காரணம் செய்ய மனந்துணிந்து
ஆத்தாள் மாகாளி வளர்பச்சை மாமலை
ஆச்சாவும் தேக்கு மிருக்கிறதை, 145

வெட்டி எடுத்திங்கே வாருமென் றானதைத்
தட்டி மறித்தான் கருப்பனுமே!
கட்டாய மாய்வெட்டக் கூடவில்லை—என்று
காத்தானுக் கோலை கொடுத்தார்கள். 146

கேட்டுக் கிழவன் வடிவெடுத்தான்.—நல்ல
ஆட்டுக் கிடாயும் பலிகொடுத்தான்,
நாட்டுக்குள் ளோர்க ளறிந்திட வேகழு
நாட்டிவைத் தார்வெகு சாத்திரமாய். 147

அந்தி மதிசூ டரனுமை யாளையும்
அம்மை காமாட்சி பதம்தன்னைப்
புந்தி தனிலே நினைந்தானே!—கழுப்
போட்டவர் போனதின் பிற்பாடு, 148

காத்தவ ராயன் கழுவேறி—நல்ல
வார்த்தை யுடைய திருக்கழுத்தில்
ஏத்திக் கழுவி லிருந்தானே!—இடை
ஏந்திழை நல்ல தங்கா ளும்வந்தாள். 149

தங்கையே தாகம் மிகவாச்சு!—மோரு
தாவென்று காத்தா னுரைத்தவுடன்
மங்கைமோர் தந்திட தாகந் தணிந்தபின்
மன்னவ னும்நெல் லளித்தானே! 150

பார்மீதி லிப்படி மூன்று தினமவர்
பாதையி லொரிய ராசன்வந்தான்.
தார்புனை மாலையான் காத்தவ ராயனும்.
தானே என்னைவெட்டு மென்றானே. 151

சொல்படி வெட்டத் துணிந்தானே! இவன்
தோளிலே பூமாலை கண்டானே!
வில்கொடு மேரு மலையானும்—எங்கள்
வேத பராபரை யம்பிகையும், 152

மஞ்சநதி வளர்கம்பைக் காமாட்சியும்,
மற்றுமுன் டாகிய தேவர்களும்
அஞ்சலென் றேஉயிர்த் தூண்டி தனைவிட்டு
அய்யன் தனையு மிறக்கினனே. 153

ஆதி யுடையான் செயலாலே—இந்த
மேதினி தன்னிலே ஆரியனை
சோதனை யாக்கிக் கழுவில்வைத்தான்—உந்தன்
தோகைய ரோடேநீ வாருமென்றான். 154

மும்மல ஸ்தூலந் தனைப்போக்கி
முடிவான தோர்தெய்வ சொரூபமதாய்
அம்மை பரனிடம் வந்தானே!—அந்த
ஆட்சிமா ரேழுபேர் தன்னுடனே, 155

ஆரியனு மலாட ரொன்பது பேருடன்
அய்யனும் தேவ ருடன்கூடி,
விரியன் வாழ்ந்திடும் பச்சை மலைதனில்
மேவியே பூசை புரிந்தார்கள். 156

பாரினில் வேதப் பதமுடையான்—நல்ல
பங்கயம் போலக் கரமுடையான்.
ஆரிய மாலை தனைச்சிறை யிட்டதை
அன்பொடு சொல்லி முடித்தானே. 157

செந்திரு மாது வளர்ந்தோங்குந்—திரு
மங்கையாம் ஒந்தாயி முன்புவளர்
பந்தன மான வயிரசெட்டி—பதி
யாளையுந் தங்க நினைந்தருளிப் 158

பூசைக் குகந்த வளநாடு!—இதைப்
போலே இனிஎங்கும் கிட்டாது.
ஆசையுட னேதன் அன்னையுங் கூட்டியே
ஆதிமல் லாண்டார் சுவாமிதன்னைச் 159

சொந்தப் படுத்தி வசமாக்கிக் குடிகள்
தந்திடும் பூசை தனைவாங்கிச்,
சிந்தனை யில்லாமல் காத்தவ ராயனும்
தேவனுமை யாளுந் தேவருடன் 160

கங்கைக் குலத்தில் அவதரித்தோன்—திரு
மங்கைவாழ் கூத்தூ ரதனில்வளர்
திங்க ளொளிர்வது போல்முகத்தான்—திருச்
செல்வப் பெருமா ளெனும்பேரன் 161

பூசைக் குகந்த பொருப்புடை யாயுந்தன்
தேசம் புகழ்திருக் கூத்தூரில்
நேசஞ் சிறந்த பிடாரி யம்மன்
நிச்சயம் வாழும் திருப்பணியில், 162

பாரு மீசானிய பக்கமதில்—நல்ல
பாங்குடன் பூச்செண்டு பழமுடனே,
நீருமிருக்கு மதையறிந்து—பூசை
நிச்செயம் நீநடத் தென்றுரைத்தாள். 163

ஏக பராபரன் ஏகாம்பர நாதனும்
ஏழைக் கிரங்கும் மனமுடையான்
பாகம் இடமதில் அம்மை காமாட்சியும்
பாலகன் தேங்க பெருமாளும. 164

மன்னர் புகழு மணிமார்பன்—எங்கள்
மாசி மலையான் எதுமலையான்
அன்னவன் முத்துக் கருப்பண்ண சுவாமியும்
அய்யன் பொதிகை மகாமுனியும் 165

எம்பிரான் காத்த பரிமண சுவாமியுங்,
ஏந்தல் கழுவடி ஆரியனும்,
அம்புவி தன்னி லழகு சிறந்திடும்
அய்யனா மாம்பூண்டியான் கருப்பன், 166

வீரன் மதுரைப் பதியாண்டோன்—பதி
வீத்திடும் சங்கிலி யாண்டவனும்,
பார மிகுந்த படைகாத்தான்—புவி
பாங்குடன் கூத்தூர் தனைக்காத்தான். 167

எங்கும் சிறந்திடும் வேளாளன்—மதி
தங்கிடும் விசுவ குலதிலகன்
பங்கமில் லாத தேவேந்திரன் குலத்தவர்
பாரில் அடிமைத் தனமுடையார். 168

சித்திரை மாசம் சிறந்த பௌர்ணமி
உத்தம மானதோர் நல்தினத்தில்,
பத்தரை மாத்துப் பசும்பொன் ரதமதில்
பார்வதி யாள்அதன் மீதுவர, 169

அன்னை காமாட்சி அருளத னாலெங்கள்
அண்ணன் கருப்பண்ணன் சன்னதியில்
நன்னய மாய்க்கழு வேறியே மீண்டிடும்
நாதன் செயல்தனைப் பாரடியோ! 170

புத்தி சிறந்த பொறுப்புடையான் கோவில்
பூசை புரிந்து திருப்பணியும்,
உத்தமன் செய்து சிறப்பு விருத்தியும்,
ஓங்கிடு மீசன் அருள்வாக்கான், 171

படைக்கு உரியான் வாய்ச்சொற் றவறாதவன்,
பட்டம் தரித்த மகராசன்,
அடைக்கலங் காத்தவன் பூசாரி என்னும்
அன்பும் அருளும் தவமுடையான். 172

தன்னுடை வம்மிச முன்னோ னாம்செல்வன்
தன்னுடன் சொன்னசொல் தப்பாமல்
உன்னத மாக மணியடித்துத்—தூப
தீபமும் பூசை நடந்துவர, 173

மாபோசன் சோழ மகராசன்—திரு
வாசகம் வீரேஸ் வரமதனில்
தபோத னர்க்கிட மாகியும் தங்கியே
தாவளம் பார்சூரி லும்பதிவாய் 174

அண்டர் புகழும் அகிலாண்ட யீஸ்பரி
அம்மன் திருப்பணிப் பூசைதரும்,
மண்டபம் தானைக் குடியிருப் புக்கழு
வேறியே மீண்டது தீங்கரவே, 175

மாரியம்மன் வாசல் காத்தவ ராயனும்
மாமயில் வீரன் விக்கி னேஸ்பரனும்
பாரினில் நல்ல பனையடி யானுடன்
பாங்குடன் தங்கிக் குடிகாத்தான். 176

எங்கும் புகழ்ந்திடப் பங்குனி மாசத்தில்
பங்கமில் லாததோர் உத்திரத்தில்
சங்கமுட னேமுன் காரணந் தன்னையே
தக்கோர்கள் யாகப் படிநடத்தி 177

அந்தர துந்துமி போல்முழங்க—மேளம்
ஆடியே பாடி முழக்கமுடன்
கந்தர மாக மணியடித்துச்—சுடர்
தூபமும் தீபமும் தான்கொடுத்துத் 178

தப்பாமல் ஆண்டு தவறாமல் அய்யன்
சன்னதி பூசை துயர்ந்துவர
இப்பார் புகழும் பெரும்புகழ்ான்—குடி
எல்லவர் தங்களை யுங்காத்தான். 179

சேம முடனே கிரங்குளித்துப்—பண்ணி
தேசத்துள் ளோர்கள் அடிமைதரும்.
ஓமாந்தூர் முன்னம் பதிவாகி
உலகெங்கும் பதிவாக வீற்றிருந்தார். 180

ஆண்டு விளம்பி வருஷமதில்—திரு
ஆனதோர் திங்கள்ாம். சித்மாதம்
பாண்டி சிறந்திடும் பூசமீதி லங்குப்
பாரும் பதினேழாம் தேதிதனில், 181

அம்மானை யாக முன்னோர்க ளுரைத்த்த
அம்மானைக் கிசையின் அடிபணிந்து
இம்மா நிலத்தினில் கார்த்தவ ராயன்மேல்
ஏத்திய கும்மி யுரைத்தனே! 182

ஆதி சிவனுமை பார்வதி முன்னே
ஐங்கரன் ஆறு முகனும் வாழி!
சோதி வடிவான கார்த்தவ ராயனும்
தோகைய ரிருவரும் தான்வாழி! 183

முத்துக் கருப்பண்ணர் தான்வாழி!—எங்கள்
முத்தய்யன் வீரையன் தான்வாழி!
பத்தியுட னிதைக்கேட்டோர் படித்தோர்கள்
பாரிலுள் ளோர்களுந் தான்வாழி! 184

அறுசீர் ஆசிரிய விருத்தம்

ஆதிசிவன் கிருபையினால் மான்வயித்தில்
அவதரித்தை வனமுங் காத்தான்
வேதியனார் வயித்துதித்துக் கழுவதனில்
பதினாறில் வீத்தி ருந்தான்.
சோதிமய மாகியதோர் சிவபதத்தை
அடைந்துலகில் தெய்வ மான
நீதியுள்ள காத்தவனார் கீர்த்திதனைக்
கும்மியதாய் நிகழ்த்தி னேனே!

குன்மி முற்றும்

விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 17—ந்தேதி குமார வயலூர் சு. முத்து மதுரையா பிள்ளை எழுதியது. வேல் துணை.

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
18—4—94.

இ. வேங்கடாசலம், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.